
இன்பத்தை அள்ளித்தரும்
இந்துமதம்
1
தமிழறிஞர்
கே. வி. குணசேகரம்

# இன்பத்தை அள்ளித்தரும்
# இந்து மதம்

பாகம் - 01

தமிழறிஞர்

கே. வி. குணசேகரம்

# என்னுரை

அன்பார்ந்த வாசகர்களே! இது நாள் வரையும் ஆத்திசூடி, திருக்குறள், பகவத்கீதை, வேதங்கள், உபநிடதங்கள், ஆகமங்கள், திருமந்திரம் போன்ற இந்து மத நூல்களுக்குக் கதை எழுதினேன். இப்பொழுது மேற்கண்ட நூல் கூறும் வாழ்க்கைத் தத்துவங்களைக் கட்டுரைகள் மூலம் எழுதி வருகிறேன். இன்பமாக ஒருவன் வாழ எவையெவை அவசியமோ அவற்றையெல்லாம் இலகு தமிழில் எழுதி; ‘‘இன்பத்தை அள்ளித்தரும் இந்து மதம்’’ என்ற பெயரில் வெளியிடுகிறேன். இத்தொடர் பத்து நூல்களாக வெளிவரும். இந்நூலை அழகுறக் கணணி மயப்படுத்தித் தந்த செல்வி க. தேனமிர்தம் அவர்கட்கும், பிரதியை ஒப்புநோக்கிப் பிழைகளைத் திருத்தித் தந்த செல்வி ப. இறைமகள் ஆசிரியைக்கும், இந்நூலை வெளியிடும் லங்கா பதிப்பகத்தினருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன்.

அன்புடன்,

கே. வி. குணசேகரம்.
கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்,
இந்துமகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

உலகம் தோன்றிப் பல்லாயிரம் வருடங்கள் கழிந்துவிட்டதாகக் கூறப்படுகிறது. இக்காலப்பகுதியில் பல கோடி மக்கள் பிறந்து இறந்திருக்கிறார்கள். இவர்களுள் சிலர் தான் மக்களுக்கு வழிகாட்டிக்கொண்டிருக்கும் மகான்களாகப் பிறந்து, இறந்த போதும், மக்கள் இன்றும் அவர்களைப் போற்றிப் புகழ்கின்றனர். அவர்கள் எழுதிய நூல்கள் சாகா வரம் பெற்று இன்றும் வாழ்கிறன. இதற்குக் காரணம் என்ன?

இந்து தர்மத்தின் பிறப்பிடம் பாரதம். பாரதத்தில் தான் வைதீக அவைதீக தத்துவங்கள் தோன்றின. பாரதம் புண்ணிய பூமி. அதனால் இறைவன் அங்கு அவதரித்து மக்களோடு மக்களாக வாழ்ந்ததாக நூல்கள் கூறுகின்றன. விஷ்னு பல அவதாரங்கள் எடுத்துத் தீமைகளை அழித்து மக்களைக் காப்பாற்றி வழிநடத்தியுள்ளார். அதே போலச் சிவபெருமானும் அவரது பிள்ளைகளான பிள்ளையாரும் முருகனும் பல திருவிளையாடல்களைப் புரிந்து மக்களுக்குத் துன்பஞ் செய்தோரை அழித்து மக்களை நல்வழிப்படுத்தியுள்ளதாக நாம் இதிகாச புராணங்களுடாக அறிகிறோம்.

பாரததேசத்தில் பிறந்த மக்களின் துன்பங்களை நீக்கி அவர்களை நல்லபடியாக வாழ வைத்த மகான்கள் எல்லோரும் கடவுள்கள். அல்லது கடவுளின் முழுமையான அனுக்கிரகத்தைப் பெற்றவர்கள். இவர்களால் தான் சாகாவரம் பெற்று வாழமுடியும்.

சகலவிதமான குணஇயல்புகளையும் கொண்ட பாத்திர அமைப்புக்கள் உடைய எக்காலத்திற்கும் பொருத்தமான கதைகள் தான் சாகா வரம்பெற்று நிலைத்து நிற்க்கின்றன.

இதிகாசங்கள், புராணங்கள், திருக்குறள், மணிமேகலை, சிலப்பதிகாரம், கந்தபுராணம், பெரியபுராணம் போன்ற ஒரு

நூலைத் தற்போதுள்ளவர்களால் எழுத முடியாது. மேற்சொல்லப்பட்ட நூல்களை நல்லபடியாக விளங்கிக் கொள்ளும் தன்மை கூடத்தற்போதைய மக்களிடம் இல்லை. இதற்குக் காரணம் போதிய அறிவின்மை தான். கடவுளை மனதார நினைத்துப் பற்றுக்களையெல்லாம் அறுத்துக் கடவுளின் சிந்தனையாக இருப்பவனால் தான் எதையும் செய்ய முடியும். தற்பொழுது அப்படியானவர்கள் இல்லை. அதனால் சாகா வரம் பெறும் நூல்களும் இயற்றப்படுவதில்லை. அப்படியான நூல்கள் வெளிவரவேண்டுமானால் கடவுளைத் தவிர வேறு எதையும் நினைக்காத மனிதர் ஒரு சிலராவது தோன்றவேண்டும். இல்லாவிட்டால் கடவுள் மனிதனாக அவதரித்தல் வேண்டும்.

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றி, இன்றும் சாகா வரம் பெற்று நிலைத்திருந்து மக்களை வழிநடத்தும் நூல்கள் தோன்ற வேண்டுமாயின் முன் சொன்ன வழியைத் தவிர வேறு வழியில்லை.

இந்துத் தெய்வங்கள் மனிதனோடு இடைவெளியில்லாமல் நெருங்கிப்பழகின. அதனால் அவை மனிதர்களாகவே வாழ்ந்து காட்டின. காதல் வாழ்க்கையையும், திருமண வாழ்க்கையையும் வாழ்ந்து காட்டி அவற்றின் புனிதத்தை வெளிப்படுத்தியவை தெய்வங்கள். அவற்றை அன்றைய நூல்கள் எமக்குக் கூறுகின்றன.

வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியையும் எடுத்து விளங்கி, அவற்றைப் பேணுவதால் உண்டாகும் நன்மைகளை மிகவும் சுவைபடக் கூறியவை அன்றைய இலக்கியங்கள். மனிதன் சுவைத்து மகிழவேண்டிய அம்சங்களையும், மன

அமைதி பெறவேண்டிய தத்துவங்களையும் கூறியவை அன்றைய இலக்கியங்கள்.

இம்மை, மறுமை பற்றியும் மக்களது கடமைகளைப் பற்றியும் மிகவும் விரிவாக அவ்விலக்கியங்கள் கூறுகின்றன. அன்று தோன்றிய இலக்கியங்கள் கூறிய சமூகவாழ்வும், சமயவாழ்வும் இன்றும் போற்றப்படுகின்றன. அந்நூல்கள் கூறிய கிரியைகளே இன்றும் கோயில்களில் நடைபெறுகின்றன. ஆன்மாவும் ஆண்டவனும் ஆனந்தமாக ஆடிப்பாடி மகிழ்ந்ததைக் கூறும் இலக்கியங்களில் சிவனும் விஷ்னுவும் மக்களுடன் ஆசா பாசங்களுடன் நெருங்கி வாழ்ந்ததை மிக அழகாகவும் இயற்கையாகவும் அன்றைய நூல்கள் கூறுகின்றன.

தீமைகள் செய்வோர் இறைவனால் தண்டிக்கப்படுவார்கள்; நன்மைகள் செய்வோருக்கு இறைவன் இன்ப வாழ்வை அளிப்பான் என்ற நம்பிக்கையை அன்றைய நூல்கள் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன. இதனால் வாழ்க்கையில் நம்பிக்கையும், பற்றும் ஏற்படுகின்றது. நமக்குத் தீமை செய்வோரைத் நாம் தண்டிக்காது விட்டாலும் இறைவன் தண்டிப்பான் என்ற நம்பிக்கையை அன்றைய நூல்கள் எடுத்துக் கூறின. அவற்றை மக்கள் நடைமுறையில் கண்டு கொண்டனர். அதனால் மக்கள் அந்நூல்களைத் திரும்பத்திரும்ப வாசித்து நிம்மதியைத் தேடிக்கொள்கின்றனர். இந்த நிம்மதியைத் அவர்களுக்கு வேறுயாரும் இதுவரை கொடுத்ததில்லை. இதனால் தான் பல்லாயிரம் வருடங்கள் கழிந்த போதும் அன்று தோன்றிய மகான்களால் எழுதப்பெற்ற நூல்கள் சாகாவரம் பெற்று இன்றும் மக்களுடன் வாழ்கின்றன. இந்நூல்கள் அழியாது, மனிதர்கள் உள்ளவரை வாழும்.

இன்று உலகில் பல்லாயிரம் மக்கள் வாழ்கின்றார்கள். ஆனால் நம்பிக்கை உள்ளவர்கள் மிகமிகக் குறைவு. நம்பிக்கையுள்ளவர்களை எப்படித் தேர்ந்தெடுக்கலாம் என்று பலர் யோசிப்பதுண்டு. நம்பிக்யையுள்ளவர்கள் போல நடித்துக் காரியத்தைக் கைப்பற்றிய அன்றே துரோகம் செய்பவர்கள் மலிந்துவிட்ட இப்பூமியில் நம்பிக்கையானவர்கள் இல்லையா என்று பலர் அங்கலாய்க்கின்றார்கள். இது பற்றிய விளக்கம் தரவும்.

நம்பிக்கைக்குரியவர்கள் சிலர் இருப்பதால் தான் மழை பெய்கிறது; உலகம் வாழ்கிறது. நாவலடிக் கிராமத்தில் சைவப்பிரகாச குருகுலம் ஒன்று இருந்தது. அதன் குரு பரராஜசேகரன். அங்கு நூற்றுக்கும் அதிகமான மாணவர்கள் பயின்று வந்தனர்..

குருவுக்குக் குருகுலத்திலிருந்து சென்று ஞானம் பெறவேண்டும் என்ற எண்ணம் மனதில் உதித்தது. அதைத்தனது மூன்று சீடர்களுக்கும் வெளிப்படுத்தினார். அந்த மூவரில் யாருக்குத் தலைப்பதவி கொடுப்பது என்று அவரால் தீர்மானிக்க முடியவில்லை. நூற்றுக்கு மேற்பட்ட சீடர்களில் அம்மூவரும் மிகவும் திறமையானவர்கள்; அறிவுள்ளவர்கள்; தலைமை தாங்கும் பண்புடையவர்கள். இவர்களில் ஒருவரை எப்படித் தெரிவு செய்வது என்று அறியாது குழம்பினார் குரு.

முதலாவது சீடன் சாந்தன். மிகவும் திறமையானவன்; சுறுசுறுப்பானவன்; குருவின் மனநிலையை அறிந்து, அவர் ஒருவிஷயத்தை நினைக்கு முன்பே செய்து முடித்துவிடுபவன். குருகுலத்தின் நிர்வாகப் பொறுப்புக்கள் யாவற்றையும் ஏற்று நல்லமுறையில் செய்பவன். சமய ஞானம் மிக்கவன். ஏனைய

மாணவர்களுடனும் குருமாருடனும் மகிழ்வுடன் நடப்பவன். பரராஜசேகரன் குருகுலத்தில் எதைச் செய்யவேண்டுமானாலும் அதை அவனுடன் ஆலோசித்த பின்பே செய்வார். வேத உபநிடதங்களை நன்கு கற்ற அவன், குரு இல்லாத வேளைகளில் மாணவர்களுக்கு அவற்றைப் பற்றி நல்ல முறையில் உபதேசம் செய்வான். அதனால் குரு தனக்குப் பின் குருகுலத்தின் பொறுப்பை அவனுக்குத்தான் கொடுப்பார் என்று அனைவரும் எண்ணினர். குருவுக்கும் அந்த எண்ணம் இருந்தது.

இரண்டாவது சீடன் பாலகுமாரன். அமைதியானவன். குருவைத் தெய்வமாக நினைத்து வணங்குபவன். குருவுக்குப் பணிவிடைகளைச் செய்வான்; வேத உபநிடதங்களைக் கற்பான்; மிகவும் அமைதியாகக் குரு குலத்தின் வேலைகளைச் செய்துவிட்டு இருப்பான்.

மூன்றாவது சீடன் தர்மேந்திரன். குருவின் மீது அளவுக்கதிகமான அன்பு கொண்டவன். ஏனைய மாணவர்களுடன் கலகலப்பாகப் பழகாது தனிமையில் இருந்து தனக்கென ஒதுக்கப்பட்டவற்றை நல்ல முறையில் செய்வான்.

அன்று குருவினது உபதேசம் முடிந்ததும் கஜேந்திரன் என்ற சீடன் குருவினது பள்ளியறைக்கு வந்து குருவின் பாதங்களைப் பிடித்துக் கொண்டிருந்தான். குரு வெகுநேரமாக எதையும் பேசவில்லை. சீடர்கள் வந்து குருவின் கால்களைப் பிடித்துவிடுவது வழக்கம்.

குரு பேசாததால் கஜேந்திரன் மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தான்; “குருவே தாங்கள் இக்குருகுலத்தை விட்டுச் செல்வது எனக்குப் பிடிக்கவில்லை. தங்கள் மீது அளவுக் கதிகமான அன்பை வைத்திருக்கும் நான், தங்களுடன்

வரவிரும்புகிறேன். தங்களுக்குப் பணிவிடை செய்யச் சீடன் ஒருவன் தேவைதானே...''

குரு அவனை நிமிர்ந்து பார்த்தார். இது நாள் வரையும் அவரின் மனதில் தோன்றாத விஷயம் அது; ''எனக்குத்தான் அது தோன்றவில்லை. கஜேந்திரனுக்குத் தோன்றிய அந்த எண்ணம் சாந்தனுக்கோ அல்லது பாலகுமாரனுக்கோ இல்லை தர்மேந்திரனுக்கோ ஏன் தோன்றவில்லை?'' என்று எண்ணினார் குரு.

''குருவே, தங்களைப் போல விசுவாசத்துடன் நடப்பவர்களின் கையில் தான் தங்களது பொறுப்புக்களை ஒப்படையுங்கள். மணிவாசகர் குருகுல முதல்வர் பரமாச்சாரிய சுவாமிகள் ஆராயாது வேதவியாசனுக்குத் தலைமைப் பதவியைக் கொடுத்தார். தலைமைப் பதவியைப் பெற்றுக் கொண்ட வேதவியாசன் பரமாச்சாரிய சுவாமிகளின் இறுதிக் கால வாழ்க்கையைக் கெடுத்தான். அதனால் அவர் இறக்கும் வரையும் துன்பத்தோடு தான் வாழ்ந்தார். இதை நான் உங்களுக்குச் சொல்லக்கூடாது. அதற்காக என்னை மன்னியுங்கள்''

குருவுக்கு இரண்டாவது முறை ஞானம் பிறந்தது.

அன்று அவர் தனது சீடர்கள் மத்தியில் உரையாற்றினார்; ''என் அன்பான சீடர்களே, ஞானம் பெறவேண்டும் என்ற எண்ணம் எனது மனதில் எழுந்துவிட்டது. அதனால் எனது குருகுலப் பொறுப்பை திறமையான ஒருவரிடம் ஒப்படைக்க விரும்புகிறேன். இப்பெட்டியை நான் அமர்ந்திருக்கும் ஆசனத்தில் வைக்கிறேன். இப்பெட்டிக்குள் என்ன இருக்கிறது என்பதை எனது முதன்மைச் சீடர்களான சாந்தன், பாலகுமாரன்,

தர்மேந்திரன் ஆகிய மூவரும் சொல்லுதல் வேண்டும். இப்பெட்டியை யாரும் திறந்த பார்க்கக்கூடாது. நாளைக்காலை எட்டு மணிக்கு நடைபெறும் வகுப்பில் இதைக்கூறலாம்''.

மறுநாள் வகுப்பு ஆரம்பமானது. குரு முதல்நாள் கூறியவற்றைப் பற்றிக் கதைக்கவில்லை. குருகேட்பார், அதைச் சொல்லலாமெனக் காத்திருந்த சாந்தனுக்கு அது பெரும் ஏமாற்றத்தை அளித்தது. ''ஒருவேளை குரு தனது முடிவை மாற்றிவிட்டாரோ?'' என்று நினைத்துக் கவலைப்பட்டான். அவனால் நிம்மதியாக இருக்கமுடியவில்லை. அதைக் குரு அவதானித்தார்.

உபதேசம் முடிந்த பின்பும் மாணவர்கள் தங்கியிருந்தனர்; ''சுவாமி, நேற்றைய உபதேசத்தின் போது சொன்னது போலப் பெட்டிக்குள் என்ன உள்ளதென்று தாங்கள் இதுவரை கேட்கவில்லை'' என்றான் சாந்தன்.

''சொல்'' என்றார் குரு.

''சிவலிங்கம்'' என்றான் சாந்தன்.

குரு பாலகுமாரனைப் பார்த்தார். அவன்; ''கல்'' என்றான்.

குரு சில கணங்கள் மௌனமாக இருந்தார். முதல் நாள் இரவு இடம்பெற்ற சம்பவம் அவரின் மனதில் நிழலாடியது.

குரு தனது அறையில் இருக்கும் போது தனக்குத் தெரியும் படியான ஓர் இடத்தில் தான் பெட்டியை வைத்திருந்தார். இரவு பதினொரு மணிக்கு ஓர் உருவம் வந்து பெட்டியைத் திறந்தது. அது கஜேந்திரன். குருவுக்குக்

கஜேந்திரனின் மீது சந்தேகம் வந்தது. அதனால் அவர் நிம்மதி இழந்தார்.

சிறிது நேரத்தின் பின் சாந்தன் வந்து பெட்டியைத் திறந்தான். பின் பாலகுமாரன் வந்து பெட்டியைத் திறந்தான். விடியற்காலை சாந்தன் வந்து மீண்டும் பெட்டியைத் திறந்தான்.

பொழுது புலர்ந்ததும் கஜேந்திரன் வந்து குருவின் பாதங்களைப் பிடித்தபடி அழுதான்; “குருவே நீங்கள் வைத்த பெட்டிக்குள் எதையும் நீங்கள் வைக்கவில்லை. சாந்தனும் பாலகுமாரனும் கட்டாயம் பெட்டியைத் திறந்து பார்ப்பார்கள் என்று எனக்குத் தெரியும். இருவரும் உங்களது பதவி தமக்குக் கிடைக்கவேண்டுமென்று பல காலமாகத் திட்டமிட்டுச் செயற்படுகின்றார்கள். அவர்களுக்கு உங்களில் நம்பிக்கை இல்லை. அவர்கள் பெட்டியைத் திறந்து அதில் எதுவும் இல்லையென்று இருவரும் அறிந்து கொண்டால் அதனால் உங்களுக்குப் பெரும் துன்பங்கள் நேரும். அதனால் தான் நான் பெட்டிக்குள் சிவலிங்கத்தை வைத்தேன். அதைக்கண்ட சாந்தன் பெட்டிக்குள் இருந்த சிவலிங்கத்தை எடுத்துவிட்டுக் கல்லை வைத்தான். பாலகுமாரன் வந்து பெட்டியைத் திறந்து பார்த்த பின் சாந்தன் மறுபடியும் வந்து பெட்டியைத் திறந்து தான் வைத்த கல்லை எடுத்துவிட்டு சிவலிங்கத்தை வைத்தான்” அழுதான் கஜேந்திரன்.

குருவுக்கு மூன்றாவது முறையாக ஞானம் பிறந்தது.

அமைதியாக இருந்த தர்மேந்திரனை அழைத்தார் குரு; “பெட்டிக்குள் என்ன இருக்கிறது?”

“எனக்குத் தெரியாது குருவே. குருவின் மீதும் குருவின் வார்த்தைகள் மீதும் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. எனக்குக்

கடமைதான் முக்கியம். பயன் முக்கியமல்ல. பயன்கருதாது தனது கடமைகளைச் செய்யும்படி பகவான் பகவத்கீதையில் கூறியதைத் தாங்கள் அடிக்கடி கூறுவீர்கள். அந்த வார்த்தைகள் தான் எனக்கு மந்திரங்கள்'' என்றான்.

''தர்மேந்திரன் தான் இனி இக்குருகுலத்தின் முதல்வன். ஒருவன் தூய்மை உள்ளவனாக வாழ்ந்தால் தூய்மையில்லாதவற்றைச் செய்யமாட்டான். ஏனென்றால் ஒருவனுக்குள்ளே இருப்பது தான் அவனது செயல்களாகவும், வார்த்தைகளாகவும் வெளிப்படும். நடிப்பு உடனும் வெளிப்படும், காலங்கடந்து வெளிப்படும். நம்பியவர்களுக்கு துரோகமிழைப்பது மிகவும் இலகுவானது. நம்பியவர்களை ஏமாற்றிவிட்டு வெற்றியடைந்துவிட்டோமென மகிழ்வோரை நரகம் ஒருபோதும் வெளியேற அனுமதிக்காது நம்பிக்கையுள்ளவர்கள் இருக்கின்றார்கள். அதைக் கண்டுபிடித்தல் வேண்டும்''. என்றார் குரு.

வேத உபநிடதங்களும் வைதீக அவைதீக சமயங்களும் பிரச்சினைப்படுவது கடவுள், ஆன்மா, உலகம் என்ற மூன்றிலுமாகும். விளக்கம் தருக.

உலகத்தையும் உயிர்களையும் இறைவன் தான் படைத்தார். இறைவனை யாரும் படைக்கவில்லை. படைக்கப்படாத பொருள் ஒன்றேயொன்று தான். அது தான் இறைவன். சமயங்கள் பலவென்றும் ஒவ்வொரு சமயங்களுக்கும் ஒவ்வொரு கடவுள்கள் உள்ளதாகவும் வேதகாலத்திற்கு முன்பே சொல்லப்பட்டுள்ளது,

ஒவ்வொருவரும் தத்தமது கடவுள் தான் உண்மையானவர் என்றும், தமது சமயத் தத்துவங்கள் தான் உயர்வானவை என்றும் கூறிப் பெரும் போர் செய்து வந்தனர். உலகம் முழுவதையும் படைத்தவர் இறைவன். ஏனென்றால் உலகத்தில் உள்ள மனிதர்கள் எல்லோரும் உருவத்தால் ஒத்துள்ளனர். ஒருதலை, இரண்டு கைகள், இரண்டு கால்கள், இரண்டு கண்கள், இருபது விரல்கள், அதைவிட இரத்தத்தின் நிறமும் அதன் வகையும் ஒத்திருக்கின்றன. இதைவிடப் பழக்க வழக்கங்களும் ஒன்றாகவே இருக்கின்றன. இதே போலத்தான் மிருகங்களும்.

பலசமயங்கள், பல கடவுள்கள், பல மகான்கள் தோன்றிய போதும் அவர்கள் கூறிய கருத்துக்கள் யாவும் ஒத்திருக்கின்றன. பஞ்சமாபாதங்களை எந்த மதமும் ஏற்றுக் கொள்ளவில்லை. வணக்க முறைகள் வித்தியாசமாக இருந்தாலும் வணக்கத்தின் நோக்கங்கள் வித்தியாசமானவைகளாக இல்லை. அதனால் இன்று ‘‘ஒன்றே குலம் ஒருவனே தேவன்’’ என்று கூறுகிறார்கள்.

உயிர்களைப் படைத்த இறைவன், உயிர்கள் வாழ்வதற்காக உலகத்தைப் படைத்தான். உயிர்களுக்கு உயிர்கள் உதவி செய்து வாழவேண்டும் என்பதே இறைவனது விருப்பம்.

திருவள்ளுவர் ஓர் இந்து என்று சிலரும், அவர் ஒரு சமணர் என்று ஒரு சிலரும், அவர் ஒரு பௌத்தர் என்று வேறுசிலரும் கூறுகிறார்கள். தற்போது அவர் கிறிஸ்தவர் என்று கூறுவருமுளர்.

திருவள்ளுவர் இந்து என்பதை நான் ஆய்வின் மூலம் நிறுவியுள்ளேன். ஆனால் பலரும் பலவிதமாகப் பேசுவதற்குக் காரணம் திருக்குறளில் உள்ள தத்துவமே. திருவள்ளுவர் ஒழுக்கத்தைப் பற்றி விதந்து கூறியபோதும் அவரது பல்வேறு குறள்கள் வைதீக சமயதத்துவத்தைப் புடமிட்டுக்காட்டுகின்றன.

8. “அறஆழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்

பிறஆழி நீந்தல் அரிது”.

அறக்கடவுளானஇறைவனுடைய திருவடிகளைச் சேராதவர்களுக்கு பொருள், இன்பம் ஆகிய பிற கடல்களை நீந்திக் கடக்க முடியாது.

9. “கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்

தாளை வணங்காத் தலை”.

கேட்காத செவி, பார்க்காத கண் என்பன போல் எண்குணங்களை உடைய இறைவனை வணங்காத தலையும் பயனற்றதாகும்.

10. “பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்

இறைவன் அடிசேரா தார்”.

இறைவனின் திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர்களால் மட்டும் பிறவிப் பெருங்கடலைக் கடக்க முடியும். மற்றவர்களால் கடக்க முடியாது.

அந்தணன், எண் குணத்தான், பிறவிப்பெருங்கடல், என்பவற்றை ஏனைய சமயங்கள் ஏற்பதில்லை.

271. “வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்
ஐந்தும் அகத்தே நகும்”.

வஞ்ச மனம் உடையவனுடைய பொய் ஒழுக்கத்தைக் கண்டு அவனுடைய உடலில் கலந்து நிற்கும் ஐம்பூதங்களும் தம்முள் சிரிக்கும்.

உடலும் உலகமும் பஞ்சபூதங்களால் ஆனது என்பதை ஏனைய சமயத்தவர்கள் ஏற்பதில்லை. இதிலிருந்து வள்ளுவர் ஓர் இந்து என்று எண்ணலாம்.

மனிதன் நினைப்பவற்றில் பெரும்பாலானவை நடப்பதில்லை. ஒவ்வொருவரும் தாம் தாம் கெட்டிக்காரரென அளவுக்கு அதிகமாக நம்பிக்கை கொண்டு செயல்புரிகின்றார்கள். இதில் வெற்றியடைபவர்களைவிடத் தோல்வியடைபவர்கள் தான் அனேகர். வெற்றியடைபவர்களும் தொடர்ந்து வெற்றியடைகிறார்களாவென்றால் அது தான் இல்லை.

பெரும் பணக்காரன் கூடத் தான் தேடிய சொத்தில் பெரும் பகுதியை அனுபவிப்பதில்லை. ஆயிரம் ஏக்கர் கரும்புத்தோட்டமுள்ள பெரும் வணிகன் உள்ளங்கையில் சீனியை எடுத்துக் கொண்டு தேநீர் குடிக்கமுடியாது கவலைப்படுகிறான். அவனது வீட்டில் நாளாந்தம் கூலி வேலை செய்பவன் நிறையச் சீனிபோட்டுத் தேநீர் குடிக்கின்றான். அப்படியானால் அனுபவிக்க முடியாத சொத்து எதற்கு?

நல்ல சுவையான உணவுகளை உண்பவனே பாக்கியவான் என்று சமயங்கள் கூறுகின்றன. உலகிலுள்ள எத்தனை பணக்காரர்கள் வயிறு நிறையச் சுவையான உணவுகளை உண்கிறார்கள். பலர் உப்புப்புளி சேர்ப்பதில்லை; பலர் சீனி எண்ணெய்வகைகளைச் சேர்ப்பதில்லை. உப்புச் சுவையில்லாத உணவைச் சிறைச்சாலையில் கொடுத்தாலும் கைதிகள் வாங்கிச் சாப்பிடாது போராட்டத்தில் ஈடுபடுவார்கள். வீடு என்ற சிறைக்கூடத்தில் மனைவி என்ற சிறைச்சாலைப் பாதுகாவலரின் கண்காணிப்பில் இருக்கும் பல பணக்காரர்கள் பேச்சு மூச்சின்றி அதைவாங்கிச் சாப்பிடுகின்றனர். இதுதான் இறைவனது திருவிளையாடல். அவரவர் செய்த கன்ம பயன்களை இறைவன் அவரவருடன் சேர்த்து வைப்பதால் இது நிகழ்கிறது.

எல்லோரும் முயற்சி செய்கிறார்கள். ஒரு சிலர் தானே முன்னேறுகிறார்கள். பல வைத்தியர்கள் கற்றது ஒரு மருத்துவக் கல்லூரியில். ஆனால் சில மருத்துவர்களிடம் நோயாளர்கள் செல்வதில்லை. அவரிடம் திறமையின்மையா....? இல்லை. அவரவர் செய்த கன்ம வினைப்பயன். பொருளிருந்தும் அனுபவிக்க முடியாத பணக்காரனைப் போல அறிவிருந்தும் நோயைத் தீர்க்க முடியாத தன்மை. இது ஆண்டவனால் கொடுக்கப்பட்டது.

உயிர்களைப் படைத்தது இறைவன். ஏனென்றால் எல்லாவற்றையும் ஒரே மாதிரியாகப் படைத்துள்ளான். ஒரு கிளியின் சித்திரம் மிகவும் அழகாக இருந்தது. அதைப்போல சித்திரம் வேண்டுமென்று நினைப்பவர் அந்தக் கிளியை வரைந்த கலைஞனிடம் தான் செல்ல வேண்டும்.

உலகத்தின் தோற்றம் மாயமானது. எனினும் மனிதன் அதை உண்மையானது என்று நம்புவதால் தான் நம்பிக்கையுடன் வாழ்கின்றான். அந்த நம்பிக்கையை உயிருடன் கலந்து இருக்கும் இறைவன் எமக்குத் தருகிறான்.

உலகம் படைக்கப்பட்டன்று உயிர்களும் இறைவனால் படைக்கப்பட்டன. ஊழிக்காலம் வந்து உலகம் அழியும் வரை என்னென்ன நடைபெறும் என்று இறைவனால் எழுதப்பட்டவையே இன்றும் நடைபெறுகின்றன. உலகம் முழுவதும் நடைபெறும் யுத்தம் பாரத யுத்தம். போட்டி பொறாமை, விட்டுக்கொடுக்காமை, மண்ணாசை, போன்றவை தான் இதற்குக் காரணம்.

கிரகணம், வால்வெள்ளி, மழை, சுறாவளி, மற்றும் இயற்கையின் சீற்றம் முதலியன பஞ்சாங்கத்தில் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றைக் குறித்தவர்கள் இறைவனின் அவதாரங்கள். இவற்றை உணர்ந்தவர்கள் உலகில் நல்ல முறையில் வாழ்கிறார்கள்.

மனிதர்கள் கடவுள், ஆன்மா, உலகம் இம் மூன்றும் எப்படித் தோன்றின என்று அவை தோன்றிய காலம் முதல் பிரச்சினைப்படுகின்றனர். ஆனால் இது வரை எந்தத் தீர்வும் கிடைக்கவில்லை. இதற்குத் தீர்வு கிடைத்தால் உலகில் உள்ள முழுப் பிரச்சினைகளும் தீர்ந்துவிடும். கடவுள் படைக்கப்பட்டவரல்ல. உலகமும் உயிர்களும் கடவுளால் படைக்கப்பட்டன என்று நம்பினால் போதும் மகிழ்ச்சியாக வாழலாம்.

கடவுளை வணங்குவதற்கு நேரம் ஒதுக்க வேண்டுமா...? அதற்கென ஒரு தினத்தையோ அல்லது விசேட தினங்களையோ ஒதுக்கிக் கடவுளை வணங்குபவர்கள் பெரும் பயனை அனுபவிப்பதாக மகான்கள் கூறுகிறார்கள். கடவுளை வணங்க ஒரு சில மணித்தியாலங்களையோ சில தினங்களையோ ஒதுக்க முடியாத பலர் இருக்கிறார்கள். இவர்களது நிலை என்ன....?

கடவுள் ஒவ்வொரு சீவனிலும் உள்ளார். பகவான் பகவத்கீதையில் கூறியது போல முக்குணங்களையுடையது ஆத்மா. இவ் முக்குணங்களும் ஆன்மாவுடன் இணைந்துள்ளன. அவை சத்துவ குணம், ராஜோ குணம், தாமோ குணம்.

இவற்றை தேவகுணம், மனித குணம், இராட்சதகுணம் என்றும் சொல்லலாம். தேவகுணமுள்ளவர்கள் மெய்யுணர்வை அடைந்தவர்கள். பற்றற்ற கடவுளின் மீது பற்று வைத்தவர்கள். வேறு எப்பொருட்களையும் அவர்களுக்குத் தெரியாது.

மனிதகுணம் உள்ளவன், ஆசாபாசங்கள் உள்ளவன் எல்லாப் பொருட்கள் மீதும் பற்றுக் கொண்டு அவற்றை அடையத் தன்னாலான முயற்சிகளில் ஈடுபட்டுப் பெரும்பாலானவற்றில் தோல்வியுற்று விரக்தியுடன் வாழ்வான். அவன் கோயிலுக்குச் சென்று கிரியைகள் செய்து வணங்கியபின் உடல் இச்சைகளுக்கு உள்ளாகி பொருட்களால் வரும் இன்பம் தான் நிஜம் என நினைத்து வாழ்வான். இவனுக்கு அடிக்கடி இன்பமும், துன்பமும் வரும். இன்பம் வரும் போது துள்ளிக் குதிக்கும் இவன், துன்பம் வரும்போது

துவண்டு விடுவான். கோயிலே கதியென்று பழிகிடந்து நேர்த்திக்கடன் வைத்து ஆசைகளால் அல்லற்படுவான்.

இராட்சத குணம் படைத்த மனிதன் எதற்கும் அஞ்சமாட்டான். பழிபாவங்களுக்கு அஞ்சாது தீமையான செயல்கள் பலவற்றை மகிழ்வுடன் செய்வான். கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்கிவிட்டுப் பஞ்சமாபாதங்கள் அனைத்தையும் மனக்கிலேசமின்றிச் செய்வான். நம்பியவர்களைக் கொலையும் செய்வான்.

தேவ குணம் படைத்த மனிதனிடம் இரக்கம் மிகுந்திருக்கும். எல்லா உயிர்களுக்குள்ளும் இறைவன் குடிகொண்டிருக்கிறான் என நினைத்து எந்த உயிர்களுக்கும் துன்பஞ் செய்யாது வாழ்வான். இவனை உயிர்கள் கைகூப்பித் தொழும். இவன் வீட்டில் இருந்து வணங்கினால் இறைவன் கோயிலைவிட்டு அவனிடஞ் சென்று விடுவார். அவனுடன் இறைவன் இரண்டறக் கலந்திருப்பதால் அவன் சொல்வதெல்லாம் நடக்கும். அவன் இறைவனை வழிபடத் தேவையில்லை. அவன் இறைவனால் ஆளப்படுபவனாக இருப்பான்.

மனித குணம் உடையவன் பழிபாவங்களுக்கு அஞ்சுவான். கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவான். தனது குடும்பத்திற்குரிய செயல்கள் அனைத்தையும் செய்வான். அயலவரை, நண்பரை, தவசிகளை, பெற்றோரை, தெய்வமாகப் பூசித்து அவர்களின் கடன்களைச் செய்வான். இவன் மகிழ்வான இல்வாழ்வான். இவனில் குடிகொண்டிருக்கும் மகிழ்ச்சி தான் தெய்வம். இவன் எப்பொழுதும் எந்தக் கடமைகளைச் செய்யும் போதும் இறைவனை ஆராதித்துவிட்டுத் தான் செய்வான். இதனால் இவனுடன் எப்பொழுதும் இறைவன்

இருப்பார். இவன் காலையில் குளித்துவிட்டும், மாலையில் முகம், கை, கால் கழுவிவிட்டும் வீட்டிலேயே கடவுளை வணங்குவதை நியதியாகக் கொள்பவன். இவன் விரும்பினால் கோயிலுக்குச் சென்று வழிபடலாம். விசேட தினங்களிலும், திருவிழாக் காலங்களிலும் சுவாமியைத் தரிசித்து வணங்குவதால் பெரும்பேறு உண்டாகும். இதே தன்மை ஒழுக்கமாக வாழும் மனிதனுக்கும் உண்டாகும். அதனால் ஒழுக்கமாக வாழ்ந்து தனது கடமையைச் செய்பவன் கடவுளை வணங்க நேரம் ஒதுக்க வேண்டியதில்லை. மூன்றாவது குணமுடைய மனிதர்கள், அதாவது இராட்சத குணமுடையோர் நேரம் ஒதுக்கிக் கடவுளை வணங்கினாலென்ன, விரதங்களை அனுஷ்டித்தாலென்ன விசேஷ தினங்கள் திருவிழாக் காலங்களில் கோயில்களுக்குச் சென்று சுவாமியைத் தரிசித்துத் தொண்டுகள் புரிந்தாலென்ன அவர்களுக்குக் கடவுளின் கிருபை கிடைக்காது.

பெரும் பெரும் பணக்காரர்கள் அநியாயமான முறையில் பணத்தைத் தேடிக் கோயில்கள் கட்டிக் கும்பாபிசேகம் செய்கிறார்கள். மிகப் பெரிய அரிசி ஆலை வைத்திருப்பவனுக்கு கல் கொடுப்பதற்கென்றுபலர் இருக்கிறார்கள். இவன் செய்யும் தான தர்மங்கள் கல்லை விலைகொடுத்து வாங்கியவர்களுக்குச் செல்லுமே தவிர இவனுக்குச் செல்லாது. திருப்பாற்கடலில் பிரமா திருமகளின் மடியில் துயில் கொண்டிருக்கும் போது திடீரென்று திடுக்கிட்டு எழுந்தாராம். திருமகள் அதற்குக் காரணம் கேட்ட போது சொன்னாராம்; ‘‘பூவுலகில் எனது ஆலயமொன்றில் கூலி வேலை செய்யும் ஒருவன் ஐம்பது சதநாணயம் ஒன்றை உண்டியலில்

இட்டான். அந்த ஓசை எனது ஆழ்ந்த உறக்கத்தைக் குழப்பிவிட்டது. அவனை நான் பெரும் பணக்காரனாக்கப் போகிறேன். பணக்காரனானால் அவனுக்கு இராட்சத குணம் வந்துவிடும். அவன் பணத்தைச் சேர்க்க முயல்வானே தவிர என்னை நினைக்க மாட்டான்'' என்று சிரித்தாராம்.

இதிலிருந்து தெரிவது என்ன?... தேவகுணம் படைத்தவன் கடவுள்.

21. ''ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து

வேண்டும் பனுவல் துணிவு''.

ஒழுக்கநெறியில் வழுவாது வாழ்ந்து பின் துறவறம் மேற்கொண்டோரின் பெருமைகளைச் சிறப்பித்துக் கூறுவதே நூல்களின் முடிவு ஆகும்.

359. ''சார்புஉணர்ந்து சார்பு கெடஒழுகின் மற்றழித்துச்

சார்தரா சார்தரும் நோய''.

எல்லாப் பொருள்களுக்கும் சார்பான செம்பொருளை உணர்ந்து, பற்றற்று வாழ்ந்தால், சார்வதற்குரிய துன்பங்கள் திரும்ப வந்து அடையாது.

அடுத்து மனித குணம் படைத்தவன் கடவுளின் நிலைக்கு உயர்த்தப்படுவான்.

இராட்சத குணம் படைத்தவன் எதைச்செய்தாலும் அவனை மனிதனாக மக்கள் மதிக்க மாட்டார்கள்.

தேவகுணம் படைத்தவன் கடவுளைத் தான் இருக்குமிடத்திற்கு வரவழைக்கும் வல்லமை மிகுந்தவன். அவனுக்காகக் கடவுள் எதையும் செய்வார்.

மனித குணம் படைத்தவன் வீட்டில் பூசைக்கென்று ஒரு தனியிடம் அல்லது அறை அமைத்திருப்பான். அவன் அங்கு வழிபட்டால் போதும்.

இராட்சத குணம் உடையவர்கள் எப்படி வழிபட்டாலும் பிரயோசனமில்லை. அதனால் அவர்கள் ஒழுங்காக வாழக் கற்றுக்கொள்ளல் வேண்டும். கடவுள் வழிபாட்டிற்கென நேரம் ஒதுக்கத் தேவையில்லை. மனதில் கடவுளை நினைத்து ஒழுங்காக வாழ்ந்தால் போதும்.

புலால் உண்ணலாமா? மனிதனது அறிவு வளர்ச்சிக்கும், உடல் வளர்ச்சிக்கும் கொழுப்பும், புரதமும் அத்தியவசியம் என்கிறார்கள். இது பற்றிய விளக்கம் என்ன?

புலால் என்பது ஒரு உயிரின் புண் என்று வள்ளுவர் கூறியுள்ளார். இந்தப் புலால் தான் பல்வேறு விதமான புதுப்புது நோய்களை உருவாக்குகின்றது. அத்துடன் அவற்றைக் குணப்படுத்தவும் முடிவதில்லை. புலால் உண்பதால் பல அரிய உயிரினங்கள் அழிந்துவிட்டன. மனிதன் தனது நாக்கிற்குச் சுவையான அனைத்தையும் அவித்தோ, பொரித்தோ உண்ணப் பழகிவிட்டான். மிருகங்களை உண்பதால் அவனுக்கு மிருக இயல்பு தானாகவே வந்துவிடுகிறது. இதனால் அவனது செய்கைகள் யாவும் மிருகத்தனமுடையதாக மாறிவிட்டன.

வைதீக சமயங்கள் புலால் உண்பதை அனுமதிப்பதில்லை. அத்துடன் பசுவைத் தெய்வமாகத்

தொழும்படி கூறியுள்ளது. அதற்குப் பல காரணங்களுண்டு. ஒரு தாயானவள் தனது பிள்ளைக்குச் சில மாதங்களுக்குத் தான் பாலூட்டுவாள். ஆனால் பசு ஒருவன் குழந்தையாக இருந்து மரணிக்கும் வரை பாலூட்டுகிறது. அதனால் அதன் மாமிசத்தைப் பூசிப்பவர்கள் பெற்ற தாயின் மாமிசத்தைப் பூசிப்பவர்களாவார்கள்.

பசுவிடமிருந்து பல அரிய போஷாக்குள்ள உணவுப் பொருட்களும், நோய்தீர்க்கும் மருந்து வகைகளும் கிடைப்பதோடு, சிவனுக்கு அர்ச்சிப்பதற்கான குங்கிலியமும் கிடைக்கிறது.

படைக்கப்பட்ட உயிர்கள் அனைத்திலும் இறைவன் குடிகொண்டிருக்கிறான். அதனால் தான் தெய்வங்களின் வாகனங்களாகப் பறவைகளும் மிருகங்களும் இருக்கின்றன. கடவுளை வணங்கும் நாம் கடவுள்களின் வாகனங்களைக் கொன்று தின்னலாமா...?

மாணிக்கவாசக சுவாமிகள் கன்மம், மறுபிறப்புப் பற்றித் திருவாசகத்தில் விளக்கமாகக் கூறுகிறார்.

"புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகி
பல்மிருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி"

என்கிறார்.

சைவசித்தாந்தப்படி ஓர் உயிர் தனித்து ஒருபோதும் இராது. அது கடவுளை அல்லது உடலைச் சார்ந்தே நிற்கும். பொதுவாக வளர்ப்புப் பிராணிகளையோ வீட்டு மிருகங்களையோ அவதானித்துப் பார்த்தால் அவை எஜமானனரின் குணங்களை ஒத்ததாகவே பெரும்பாலும் இருக்கும். இது எப்படி ஏற்பட்டது? அம் மிருகங்கள் எஜமானரை

அவதானிப்பதன் மூலம் அவர்களுக்கேற்ற படி தமது குணத்தை அமைத்துக் கொள்ளும். இது ஒரு வகை.

எமது உற்றார், உறவினர்கள் இறந்தால் அவர்களின் கன்மவினைக்கேற்பப் பிறவிகள் எடுத்து முற்பிறப்பின் கடனைத் தீர்த்துக்கொள்வார்கள். அவர்கள் சில சமயம் மிருகங்களாகவும் பிறக்கலாம். அதனால் தான் மிருகங்களைக் கொன்று தின்னக்கூடாது என்று பெரியவர்கள் கூறியிருக்கிறார்கள்.

தற்பொழுது மனிதர்களைத் தாக்கும் பெரும்பான்மையான நோய்களைக் குணப்படுத்த வைத்தியரிடஞ் சென்றால் வைத்தியர் கொழுப்புணவுகளான மீன், முட்டை, இறைச்சி என்பவற்றை உண்ண வேண்டாம் என்கிறார். பச்சிலைகளையும், கிழங்கு வகைகளையும், காய்கறிகளையும் பச்சையாக உண்ணும்படி கூறுகிறார். அவர் படித்துப் பட்டம் பெற்ற வைத்தியர். ஆனால் எமது மூதாதையர் தமது அனுபவம் மூலம் இதை உணர்ந்து அதை நடைமுறைப்படுத்தி வாழ்ந்தனர்.

ஒரு தவசி பலநாட்கள் உண்ணாமல் இருப்பான். அவனின் மூளைவளர்ச்சியிலோ, அறிவு வளர்ச்சியிலோ குறை ஏற்படுவதில்லை. அவன் பலவானாக இருந்தான்.

மாமிசங்களைப் பூசிக்கும் எந்த மிருகங்களும் பலமுடையவனாக இருப்பதில்லை. யானை, குதிரை, எருது, எருமை போன்றன எவ்வளவு பாரத்தைத் தூக்குகின்றன. நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஏராளமான தேவாரங்களையும் பிரபந்தங்களையும் பாடினார்கள். இவர்கள் அறிவில் குறைந்தவர்களாக இருந்தார்களா...?

உணவு தான் மனிதனின் உணர்வுகளைத் தட்டி எழுப்புகின்றது. உணவைப் பொறுத்துத் தான் ஒருவனது உடல் செயற்படும். உணவைக் குறைப்பவன் யோகி; அளவுடன் உண்பவன் போகி; அளவுக்கதிகமான உண்பவன் ரோகி.

கீதையில் கண்ணன் உணவைப்பற்றிக் கூறுகின்றான்; "அர்ச்சுனா! அதிகமாக உண்பவனுக்கு யோகமில்லை; ஒன்றும் உண்ணாதவனுக்கும் இல்லை. அளவான ஊனும் உழைப்பும் தான் ஒருவனை முன்னேற்றும்" என்று.

குடம் நிரம்பிய பின்பும் தண்ணீரை ஊற்றினால் அது வெளியே போகும். பை நிறைந்த பின் எப்படிப் பொருட்களை வைப்பது. இது போலத்தான் உணவும்.

சைவஉணவுகளை உட்கொண்டால் மனம் சாத்வீகமாக இருப்பதோடு சுத்தமாகவும் பரபரப்பின்றியும் இருக்கும். மாமிச உணவை உண்டால் இராட்சத குணம் அதிகரிக்கும். மனதில் இரக்கம் இராது. கொலை வெறியும் பழிவாங்கும் எண்ணமுமே உண்டாகும்.

945. "மாறுபாடு இல்லாத உண்டி மறுத்துஉண்ணின்

ஊறுபாடு இல்லை உயிர்க்கு".

தனக்கு ஒவ்வாத உணவு வகைகளை ஒதுக்கி, அளவுக்கு அதிகமாக உணவை உண்ணாமல் வாழ்கின்றவனுடைய உடம்பில் துன்பத்திற்கிடமான நோய்கள் உண்டாகாது.

946. "இழிவுஅறிந்து உண்பான்கண் இன்பம்போல் நிற்கும்

கழிபே ரிரையான்கண் நோய".

குறைந்தளவு உணவை அது இன்ன தென்று அறிந்து உண்பவனிடம் இன்பம் நிலைத்திருக்கும். அளவுக்கதிகமாக உண்பவனிடத்தில் நோயே நிலைத்து நிற்கும்.

947. “தீயளவு அன்றித் தெரியான் பெரிது உண்ணின்

நோயளவு இன்றிப் படும்”.

பசித்தீயின் அளவு அறிந்து உண்ணாமல் அளவுக்கதிகமாக உண்பவன் அளவில்லாத நோய்களுக்கு உள்ளாக்கி அவதிப்படுவான்.

உணவைப் பற்றி வள்ளுவர் மருந்து என்ற அத்தியாயத்தில் இப்படிக் கூறுகிறார். .

மனிதன் உணவுக்காக உண்ணும் பெரும்பாலான உயிரினங்கள் இலைகளையும், தழைகளையும், புற்களையுமே உண்டு வாழ்கின்றன. அதனால் அதன் மாமிசத்தில் அவை உண்ட சத்துக்கள் தான் இருக்கும். ஆகையால் அம்மிருகங்கள் உண்பவற்றை உண்டால் நல்லதென்று ஏன் மனிதன் நினைக்கக் கூடாது.

நாம் வீட்டைத் தவிர்ந்த வேறு இடங்களில் உணவு உண்ணும் போது மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். ஒரு அன்பர் ஒரு நாள் ஒரு உணவு விடுதியில் உணவு அருந்தினார். அவருக்கு அதன் பின் பத்து நாட்கள் நித்திரை வரவில்லை. இரவில் ஒரே துர்க் கனவுகள். அவர் அதைப்பற்றி தனது நண்பரிடம் விசாரித்த போது அவர் சொன்னார்; “ஒரு வாரத்திற்கு முன் அவ் உணவு விடுதியின் முகாமையாளர் விபத்தொன்றில் இறந்துவிட்டார். அதனால் தான் நீர் துர்க்கனவுகளைக் காண்டீர்”

அதனால் உணவு உண்ணும் போது எப்பொழுதும் அவதானமாக இருத்தல் வேண்டும்.

ஞானம் என்பது என்ன? அதை எவ்வாறு அடையலாம்?

ஞானம் என்பது என்ன என்பதை ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக உணர்ந்துள்ளனர்.

ஞானம் என்பது மெய் உணர்தல். அதாவது எதையும் சந்தேகமில்லாமல் தெளிவாக அறிந்து கொள்ளல்.

ஐம்புலன்களால் வரும் இன்ப துன்பங்களைச் சமமாக மதித்தல்.

எப்பொருளாக இருந்தாலும் அதன் தோற்றத்தைக் கண்டு மயங்காமல் அதன் உண்மை நிலையை அறிதல்.

கற்கவேண்டியவற்றைக் கற்று உணர வேண்டிய உண்மைப் பொருட்களை உணர்தல்.

பற்றுக்களை அறுத்தல்.

இப்படி வள்ளுவர் சொல்கிறார்.

இந்த ஞானம் பல்வேறு வகையான நூல்களைக் கற்பதால் வராது. தன்னிடம் உள்ள குறைநிறைகளை உணர்ந்து அதிலிருந்து விடுபட்டால் ஞானம் பிறக்கும்.

அடுத்தவனிடம் குறைகாணாது குறைகள் யாவும் தன்னிடமே உள்ளன என்ற நினைவு வந்தால் ஞானம் பிறக்கும்.

தான் முழுமையாக நம்பித் தன் உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஒப்படைத்துவிட்டுத் தன் இறுதிக்காலம் வரை நல்லுறவு பாராட்டுவான் என்று நினைத்தவன் நம்பியிருந்தவனுக்குத் துரோகம் செய்தால் உலகம்

இப்படித்தான் என்ற ஞானம் பிறக்கும். இதன் மூலம் உதவி செய்ய வேண்டும். நம்பக்கூடாது என்ற ஞானம் பிறக்கும்.

பட்டுக்கெட்ட பின்பு தான் ஞானம் வரும்.

பட்டணத்தார் பத்திரகிரியாரைச் சந்தித்த போது அவரது பட்டத்தரசியும் கூட இருந்தாள். அவளது உருவ அமைப்பைப் பார்த்ததும் பட்டினத்தார் அவள் இரண்டு மனம் படைத்தவள் என்பதை அறிந்து கொண்டார். ஆனால் பத்திரகிரியார்; ‘‘எனது மனைவி கற்புக்கரசி; என்னைத்தவிர வேறு எந்த ஆடவரையும் நிமிர்ந்து கூடப் பார்ப்பதை விரும்புவதில்லை. அவளை மனைவியாக அடைந்தது என்பாக்கியம்’’ என்று பட்டணத்தாருக்குக் கூறினார்.

சில நாட்களின் பின் அவள் குதிரைக்காரன் மீது ஆசை கொண்டு குதிரை கட்டுமிடத்தில் அவனுடன் உறவு கொண்டதைப் பத்திரகிரியார் கண்டார்.

அப்பொழுது அவருக்கு ஞானம் பிறந்தது. அரசரான அவர் அரசைத் துறந்து கோவணத்துடன் நாட்டைவிட்டுப் புறப்பட்டார்.

மனிதன் ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு வழியில் மெய் உணர்வு உண்டாகும். அது அவரவரது அனுபவங்களைப் பொறுத்தது.

துன்பப்படுகிறவனின் அழுகையொலி ஒருவனது ஆத்மாவுக்குக் கேட்டு அது தனக்கேற்பட்ட துன்பமெனக் கருதி அத்துன்பத்தை நீக்குபவனுக்கு ஞானம் ஏற்படும்.

இராமகிருஷ்ணபரமகம்சர் கூறிய கதையொன்று ஞாபகத்திற்கு வருகிறது. ஒரு சுவாமியார் இருந்தார். அவருக்கு ஒரு சீடன் இருந்தான். சுவாமியார் சீடனை இல்லறத்தைத்

துறந்து விட்டுத் தன்னுடன் வருமாறு அடிக்கடி கூறுவார். அதற்கு அச்சீடன் ‘‘ஐயோ! எனது மனைவி என்மீது அளவில்லாத அன்பு கொண்டிருக்கிறாள். அவள் என்னைப் பிரிந்து ஒருகணமும் இராள்’’ என்றான்.

‘‘மகனே, யாரையும் நம்பாதே. அவள் உன்னை ஏமாற்றுகிறாள். நான் உனக்கு ஒரு மருந்து தருகிறேன். அதைக் குடித்துவிட்டு நீ வீட்டுள் படு. அப்பொழுது நீ இறந்தவர் போலக் கிடப்பாய். ஆனால் வெளியே நடப்பதெல்லாம் தெரியும்’’ என்றார் சுவாமி.

சீடன் வீட்டுக்குள்ச் சென்று குரு கொடுத்த மருந்தைக் குடித்துவிட்டு இறந்தவன் போலக் கிடந்தான். மனைவி குழற அக்கம் பக்கத்தவர் கூடிவிட்டனர்.

குரு வந்தார். எல்லோரும் பாசமிகுதியோடு அழுதனர். பிரேதத்தை வெளியே கொண்டு செல்லும் முயற்சி நடைபெற்றது. பிரேதமாகக் கிடந்தவனின் கை, கால்கள் வளைந்திருந்தன. சிறிய வாசலூடாகப் பிரேதத்தை வெளியே கொண்டுவர முடியவில்லை.

அங்கிருந்த ஒருவன் சொன்னான்; ‘‘கதவை உடைத்துப் பிரேதத்தை வெளியே கொண்டு செல்வோம்’’

மனைவி அழுதாள்; ‘‘ஐயோ, அவர் இறந்துவிட்டார். இனி என்னைக் காப்பாற்ற யாரும் இல்லை. அதனால் உடைத்த கதவை என்னால் திருத்த முடியாது. பிரேதத்தின் கையையும் காலையும் வெட்டிவிட்டுக் கொண்டுசெல்லுங்கள்’’

சீடன் துள்ளியெழுந்தான். உலகில், பற்று, பாசம், காதல் எல்லாம் பொய். கடவுளின் மேல் பற்று வைப்பதுதான் மெய்யென உணர்ந்து குருவுடன் சென்றான். அவனுக்கு ஞானம் பிறந்தது.

இதே போன்ற இன்னுமொரு கதையை இராமகிருஷ்ணபரமகம்சர் கூறியுள்ளார்.

ஒரு குருவுக்கு பக்தி மிகுந்த சீடன் ஒருவன் இருந்தான். அவனால் பந்த பாசங்களைத் துறக்க முடியவில்லை. தினமும் தனது தாயார் தன் மீது வைத்திருக்கும் அன்பைப் பற்றிச் சொல்வான். தனது மனைவி தன் மீது வைத்திருக்கும் பாசத்தைப் பற்றிச் சொல்வான். பிள்ளை குட்டிகள், உறவினர்கள், அயலவர்கள் தன் மீது பொழியும் பாசத்தைப் பற்றிச் சொல்வான். அதைப் பொய்யென நிரூபிக்க குரு விரும்பினார்.

குருவின் உபதேசப்படி அவன் இறந்தவன் போலக் கிடந்தான். ஊர் கூடிவிட்டது. துறவி வந்து சொன்னார்; ‘‘இவனை உயிர்ப்பிக்க முடியும். அதற்கொரு வழியுள்ளது.’’

‘‘என்ன...? என்ன..? உடனே சொல்லுங்கள் நாம் செய்கிறோம்’’ மனைவி, தாய், உறவினர்கள், அயலவர்கள் ஒருமித்துக் கூறினர்.

சீடனுக்கு மகிழ்ச்சி, ‘‘குரு பாடம் படிக்கப் போகிறார்’’ என்று நினைத்தான்.

‘‘இவனை உயிர்ப்பிப்பதானால் இன்னொருவர் உயிர் துறக்க வேண்டும். யார் முன்வருகிறீர்கள்?’’

எல்லோரது ஆர்வமும் குறைந்தது. தாய் சொன்னாள்; ‘‘எனது மற்றய பிள்ளைகளைக் காக்க வேண்டும். பேத்தியின் திருமணத்தைப் பார்க்க வேண்டும்’’

மனைவி சொன்னாள்; ‘‘எனது பிள்ளைகளை வளர்த்து அவர்கள் மகிழ்வுடன் இருப்பதைப் பார்க்க வேண்டும்’’

உறவினரும், அயலவரும் சத்தமில்லாமல் விலகினர்.

சீடனுக்கு ஞானம் பிறந்தது; ‘‘உலகில் உள்ள யாவும் பொய்’’ என்று உணர்ந்தான். குருவின் பின்னே சென்றான்.

சொல்வதைவிடச் சிலர் செயலில் காட்டுவார்கள். எனது நண்பர் ஒருவர் பதவி உயர்வு பெற்றுச் சென்றபோது தனது பதவியை ஒருவரிடம் நிபந்தனை ஒன்றின் பேரில் ஒப்படைத்தார். பதவி பெற்றவர் அவருடன் மகிழ்வுடன் கதைப்பார். அவரைப்பற்றி பெரிதாக மக்களுக்குச் சொல்வார். அவர் தான் தனது கடவுள் என்பார். எனது நண்பன் பதவியைக் கொடுக்கும் போது ஒருவரின் பெயரைக் குறிப்பிட்டு அவருடன் சேர்ந்து நிர்வாக வேலை செய்ய வேண்டாம் என்று சொன்னார். அவர் அந்நிறுவனத்தில் குடிகொண்டிருக்கும் வித்தியா மகா கணபதி மீது சத்தியம் செய்தார். இன்று அவர் குறிப்பிட்ட நபருடன் உல்லாசமாகப் பொழுதைப் போக்குகின்றார். பல முறை பதவி கொடுத்தவர் அதை ஞாபகப்படுத்தினார். பதவி பெற்றவர் சிரித்தார். பலகதைகள் சொன்னார்.

எனது நண்பனுக்கு ஞானம் பிறந்தது. நிறுவனத்தின் பொறுப்பை ஒப்படைத்தபின் அவரின் வீட்டிற்கு செல்வதில்லை.

ஞானம் பிறக்கப் பல வழிகள் உண்டு. உலகம் பொய் என்றும் நடிப்பு என்றும் தெரிந்த பின்பும் பற்றுக்களை விட முடியாது அவதிப்படுவோர் தான் அதிகம். ஞானம் பிறந்ததும் குடும்பத்தைவிட்டு வெளியேறவேண்டும் என்று பலர் நினைக்கிறார்கள். பற்றில்லாமல் குடும்பத்தவருடன் வாழலாம். பற்று அறுப்பது தான் ஞானமே தவிர, குடும்பத்தைவிட்டுப் பிரிவது ஞானம் அல்ல.

கிரியை முறையில் ஆண்டவனை வழிபடுபவர்கள் தான் விரைவில் முத்தியடைகிறார்கள் என்றும், ஆண்டவனிடமிருந்து கிரியை முறை மூலம் தான் அதிக பயனைப் பெறலாம் என்ற நம்பிக்கை மக்களிடம் உள்ளது. வேறு மதத்தவர்களின் குருமார்கள் எதையும் இலவசமாகச் செய்கிறார்கள். இந்து மதக்கிரியைகளுக்குப் பல்லாயிரக்கணக்கான காசு செலவு செய்யப்படுகின்றது. இதைச் சாதாரண மக்களால் செய்யமுடியாதிருக்கிறது. இதை நீக்க வழியென்ன?

இது பலகாலமாக மக்களின் மனதில் இருந்து வரும் பெருங்குறை. இறைவனை அடையச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பாதங்கள் உள்ளன. இறைவன் எளிமையானவன்; பாகுபாடற்றவன்; விருப்பு வெறுப்பு இல்லாதவன்; உயர்வு தாழ்வு பாராதவன்; பற்றில்லாதவன் என்று கூறுகின்றார்கள். இறைவனை எப்படியும் வழிபடலாம். ஒவ்வொருவரும் தாம் விரும்புகின்றபடி வழிபடலாமெனப் புராணங்களும் இதிகாசங்களும் கூறுகின்றன.

எறிபத்த நாயனார் கற்களைப் பொறுக்கி அதைச் சிவன் மீது எறிய அவை பூக்களாக மலர்ந்து சிவன் மீது

விழுந்ததாம். கடவுளை வழிபடும் போது சுத்தமான மனத்துடன் பரபரப்புக்கள் ஆசைகளின்றி வழிபடவேண்டும்.

தனது பொருளாதாரத் தேவையைக் கருதி வழிபடுபவனும், முத்தியை நினைத்து வழிபடுபவனும் இறைவனுடன் ஒன்றரக் கலந்த நிலையில் வழிபடவேண்டும். சாதாரண ஒரு மனிதனால் ஒரு நிமிடம் கூடத் தனது மனதை அடக்கி இறைவனை வழிபட முடிவதில்லை.

உயிர்களைப் படைத்து, உயிர்களின் நன்மைக்காக உலகைப் படைத்து, உயிர்களின் பாவபுண்ணியங்களுக்கேற்ப இன்ப துன்பங்களைக் கொடுத்து, உயிர்களை வாழ்விற்கும்இறைவனுக்கு மனிதர்கள் பொங்கிப் படைக்கவேண்டுமா...? அல்லது கிரியைகளைச் செய்யவேண்டுமா...?

இறைவன் கருணைக்கடல். அக்கடலில் இருந்து தேவையானவற்றைப் பக்தியின் மூலம் அள்ளலாம். மனிதன் பாலைவனம். அவனிடமிருந்து ஒரு துளி நீரைக்கூட இறைவன் எதிர்பார்க்க மாட்டார். உலகிலுள்ள அனைத்தையும் படைத்த இறைவனுக்கு நாம் எதற்கு அவன் படைத்ததைக் கொடுத்தல் வேண்டும். பூவைப்படைத்த ஆண்டவனுக்கு நீ ஏன் மாலை போடவேண்டும்...?

கண்ணப்பர் பன்றியைக் கொன்று அதன் மாமிசத்தைச் சுட்டு தான் சுவை பார்த்த பின்பு இறைவனுக்குப் படைத்தார். கண்ணப்பரைப் போன்ற ஒரு பக்தர் உலகின் இதுவரை தோன்றியதில்லை.

பூசலார் நாயனார் மனதில் கோயில் கட்டினார். இராஜராஜசோழன் கருங்கல்லால் பெரியதொரு கோயில் கட்டினான். இருவரும் கும்பாபிஷேகம் செய்ய ஒரு தினத்தையே

தெரிவு செய்தனர். சிவபெருமான் நாட்டை ஆளும் மன்னனை விடப் பரதேசியாக வாழ்ந்த பூசலாரின் அன்பைத்தான் விரும்பினார். அதனால் சோழனின் கனவில் சென்று; ‘‘மன்னா நீ கும்பாபிஷேகம் செய்ய நினைத்த நாளில் பூசலார் தான் கட்டிய கோயிலில் கும்பாவிஷேகம் செய்ய நினைத்திருக்கிறார். நான் அங்கு செல்லவே விரும்புகிறேன்’’ என்றார். மன்னனுக்கு ஆச்சரியமாக இருந்தது. மறுநாள் மன்னனும் பரிவாரங்களும் பூசலார் கட்டிய கோயிலைப் பார்க்கச் சென்றனர். அங்கு கோயில் இல்லை. பூசலார் இருந்தார்.

மன்னன் பூசலாரைப் பார்த்து; ‘‘கோயில் எங்கே?’’ என்று கேட்டான்.

பூசலார் தனது நெஞ்சைத் தொட்டுக்காட்டினார்.

இதனால் போலும் திருமந்திரம்; ‘‘உள்ளம் பெருங்கோயில்’’ என்கிறது.

இறைவனுக்குப் பணம் செலவு செய்து கிரியைகள் செய்யத் தேவையில்லை. பிறர் செய்வதைப் பார்க்கலாம். இல்லாவிட்டால் கற்பூரம் கொழுத்தித் தேங்காய் உடைக்கலாம்.

இந்து சமயத்தில் முதல் மரியாதை பெறுபவர் விநாயகர். இவரை நாம் விரும்பிய இடங்களில் வைக்கலாம். வைத்துவிட்டு நீரால் கழுவலாம்; பூ வைக்கலாம்; மாலை போடலாம்; தீப தூபங்காட்டலாம்; பிரசாதங்கள் வைக்கலாம். கோயிலுக்குச் சென்று தான் கிரியைகள் செய்யவேண்டுமென்றில்லை.

குடத்தால் நீருற்றும் போது அபிஷேகம் நடப்பதாக நினையுங்கள். பூக்களைப் போடும்போது

மந்திரங்களை உச்சரிப்பதாக நினையுங்கள். மரத்தடிப் பிள்ளையாரை வீதியுலாக் கொண்டு செல்வதாக நினையுங்கள். பெருங்கோயில் ஒன்றில் நீங்கள் பூசகராக இருந்து செய்யும் பலன் இதன் மூலம் கிடைக்கும்.

கிரியைகள் என்றவுடன் பல்லாயிரக்கணக்கான ரூபா தேவையென்று கருதாது பெரியதொரு கோயிலில் செய்யும் கிரியைகள் யாவும் மரத்தடியில் உள்ள விநாயகருக்குச் செய்வதாக நினையுங்கள். உங்கள் ஆத்மாக்குள் மேளதாளங்கள் மந்திரங்கள் யாவும் கேட்கும்.

இதை விட்டுவிட்டுப் பணம் பொருள் தேவையென்று நினைக்காதீர்கள். பணம், பொருள், மேளதாளம், மந்திரங்களையெல்லாம் படைத்த கடவுள், பக்தனுக்காக அவற்றையெல்லாம் தனது சந்நிதானத்திற்கு வரவழைத்துப் பக்தனை மகிழ்வடையச் செய்வார். நம்பிக்கையுடன் நினைத்தால் தும்பிக்கையுடன் இறைவன் உன்முன் வருவார்.

அத்துடன் கிரியைத் தொண்டைச் செய்யப் பலர் இருக்கின்றார்கள். ஆண்டவனுக்கு அணிகலன்களைக் கொடுக்கப் பலர் இருக்கின்றார்கள். ஆனால் சரியைத்தொண்டு செய்ய யாரும் இல்லை. அதனால் சரியைத் தொண்டு செய்யுங்கள். இறைவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுப்பது சரிகைத்தொண்டு. கூட்டுதல், கழுவுதல், தீபமேற்றல், தேவார திருவாசகங்களைப் பாடல் போன்றன தான் இறைவனுக்கு விருப்பமானவை.

குரல்வளமுடையவர்கள் மனமுருகிப்பாடினால் இறைவன் பாடுபவனுடன் சென்றுவிடுவான். வீதியால் பாடிக்கொண்டு சென்ற நமசிவாயரின் பின்னால் சென்ற அம்பிகைக்கு, நமசிவாயர் வெற்றிலை எச்சிலைத் துப்பியதாக

வரலாறு உண்டு. எனவே கிரியையைப் பற்றி பெரிதாக எண்ணிக் கவலைப்படத் தேவையில்லை.

இந்துக்கள் மூடநம்பிக்கை மிக்கவர்கள். பைத்தியக் காரர்களைப் போல மனம் போனபோக்கில் வழிபடுவதும், கிரியைகள் செய்வதும் வழக்கம். ஏன் அவர்கள் அப்படிச் செய்கிறார்கள்?.

உலகில் நாகரீகமடைந்தவர்கள் இந்துக்கள் என்று பலரும் ஒப்புக்கொண்டுள்ள இவ்வேளையில் சிலருக்குப் பைத்தியக்காரத்தனமான எண்ணங்கள் தோன்றுவது வியப்புக்குரியது.

இந்துக்கள் திருநீறு அணிகிறார்கள். இது உலகம் சாம்பல் ஆகும் என்ற எண்ணத்தைக் குறிக்கிறது. இதைவிடப் பசுவின் சாணத்தின் மகிமையை வார்த்தைகளால் கூறமுடியாது. அது ஓர் இயற்கையான கிருமி நாசினி. வீட்டை மெழுகிய பின்பு, முற்றத்தைச் சாணிகரைத்துத் தெளித்த பின்பு விஷக்கிருமிகள் எவையும் அவ்விடத்திற்கு வரமாட்டாது. அதனால் அன்றை மனிதன் நோயின்றி வாழ்ந்தான். பசுவின் சலத்தைப் பயிர்களுக்குத் தெளிப்பதால் கொடிய கிருமிகள் யாவும் அழிந்தன. மேல்நாட்டவர் தமது வியாபார விளம்பரங்களால் சூழலை மாசடையச் செய்ததோடு மனிதனின் ஆரோக்கியத்தையும் கெடுத்துவிட்டனர்.

இந்துக்கள் உருத்திராட்சம் அணிவது, தான் சிவனது சீடன் என்பதை வெளிப்படுத்த, அத்துடன் நான்

பெறுமதியில்லாதவன்; பற்றற்றவன்; பிச்சை எடுத்து உன்பவன் என்பதை நினைவுபடுத்த.

வேதகால மக்கள் மட்டுமன்றி உலகில் உள்ள மக்கள் அனைவரும் ஆரம்பத்தில் இயற்கையையே வழிபட்டனர். சூரியன், சந்திரன், தீ, நீர், காற்று, மின்னல், இடி, ஆறு என்பன மக்களை அச்சுறுத்திக்கொன்று குவித்தன. அதனால் மக்கள் பயத்தின் காரணமான அவற்றை வழிபட்டனர். பின் வேதகாலத்தில் பிரம்மத்தை வழிபட்டனர். அதன் பின்னர் பிரமம் என்பது சிவம் என உணர்ந்து கொண்டனர் என மாண்டூக்கிய உபநிடதம் கூறுகின்றது. ருக்வேதம் கி.மு 3000 ஆண்டுக்கு முன்பே உருவாகிவிட்டது. இது உருவாகி 2000 ஆண்டுகளுக்குப் பின் தான் அதர்வணவேதம் உருவானதாக ஆராட்சியாளர்கள் கணக்கிட்டுள்ளனர். அதனால் ருக்வேதம் பிரமம் தான் உலகைப்படைத்தது என்று கூறுகிறது. அதற்குப் பின் உருவானது அதவணவேத உபநிடதமான மாண்டூக்கியம். இதில் பன்னிரண்டு மந்திரப்பாடல்கள் உள்ளன. “ஓம்” என்ற பிரணவத்தில் தான் யாவும் அடங்குவதாக இவ் உபநிடதத்தின் முதற்பாடல் கூறுகிறது. ருக்வேதம் “ஓம்” என்ற பிரணவ மகாமந்திரத்திற்குரியவர் பிரமம் என்று கூற, மாண்டூக்கியம் அதை யானை முகம் கொண்ட பிள்ளையார் என்று கூறி, அவர் சிவனுக்கு மூத்த மகன் என்று கூறுகிறது. பிள்ளையாரின் அம்சங்களையும் அது கூறுகின்றது. அதில் பிரதானமானது பிள்ளையாரை வணங்காமல் எக்காரியத்தையும் தொடங்கக் கூடாது என்பதே.

வேத கால மனிதனைப் போல உலகெங்கும் இருந்த மனிதர்கள் இயற்கையைப் பயத்தினால் தெய்வமாக

வழிபட்டனர். கொடிய விலங்குகளையும் வழிபட்டனர். காட்டில் மரப்பொந்துகளிலும், குகைகளிலும் வாழ்ந்த மனிதன் விலங்குகளுக்குப் பயந்தான். காட்டில் அதிகமாக வாழ்வது பாம்பு. மனிதன் தனக்குத் தீமை செய்பவற்றை வணங்கும் வழக்கம் கொண்டமையால் பாம்புகளையும் வணங்கினான். அதை விடப் பாம்பைச் சிவன் அணிந்துள்ளார்; பரந்தாமன் அதில் பள்ளிகொண்டுள்ளார். சிவசின்னங்கள் அனைத்தையும் சிவனென நினைப்பவர்கள் இந்துக்கள். அதனால் பாம்பையும், கங்கையையும், அக்கினியையும் வழிபடுகின்றனர். அத்துடன் சிவன் சுடலைச் சாம்பலைப் பூசுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார். அதோடு திருநீறு அணிவதையும் வழக்கமாகக் கொண்டுள்ளார். தந்தையைப் பார்த்துப் பிள்ளைகள் தமது பழக்க வழக்கங்களை உண்டாக்கிக் கொள்வது போல உலக மக்களின் தந்தையான சிவன் அணிவதை மக்களும் அணிந்தனர்.

சங்ககால மக்களின் பாடசாலையாகவும், வைத்தியசாலையாகவும், போர் நிகழும் காலத்தில் பெண்கள், வயோதிபர்கள், குழந்தைகளினது பாதுகாப்பிடமாகவும் கோயில்கள் விளங்கின. அதனால் கோயில்களில் பொங்கி இறைவனுக்குப் படைத்துத் தாமும் உண்டனர். இறைவனுக்குப் படைக்கப்படும் எந்த உணவும் வெளியே கொட்டப்படுவதில்லை. நிலத்தில் சிந்துவது கூடப் பூச்சி புழுக்களுக்கு உணவாகின்றது.

கோயில்கள் வைத்தியசாலைகளாக இயங்கியதால் மூலிகை வகைகளையும், பாலையும், தேனையும், இளநீரையும் சேர்த்து இறைவனுக்கு அபிஷேகம் செய்யப்படும் நீர் தீர்த்த நீராகி மக்களின் பல நோய்களைக் குணமாக்கியது.

இடைக்காலத்தில் மேலைத்தேசத்தவரின் குளிகைகள் நோயை மாற்றுவதற்குப் பதிலாக நோய்களை அதிகரித்தமையால் இன்று ஆங்கில வைத்தியார்கள் கூட மூலிகைகளை உண்ணும்படி கூறுவதோடு, மாமிச உணவுவகைகளைத் தவிர்க்கும் படி கூறுகிறார்கள்.

மனித ஆரோக்கியத்திற்கு ஏற்ற விதிகளையே இந்து மதம் கூறியுள்ளது. ஆத்ம ஈடேற்றத்தையும் உடலின் ஆரோக்கியத்தையும் கருதியே இவ்விதிகள் அமைக்கப்பட்டன.

மரண வீட்டிற்குச் சென்றால் முழுகவேண்டும். இது மரணவீட்டில் தொற்றிய கிருமியை வெளியேற்றும் நடவடிக்கை.

முடி வெட்டினால் முழுகவேண்டும். வழி தெருவில் அழுக்குகளை மிதிப்பதால் காலைக் கழுவிவிட்டே வீட்டிற்குள்ளும், கோயிலுக்குள்ளும் செல்லவேண்டும்.

பாதணிகள் வீட்டிற்குள்ளும் கோயிலுள்ளும் அணியக் கூடாது.

இறைவனுக்கு நிவேதிக்கப்படும் உணவு வகைகளில் உப்பு, வெங்காயம் முதலியவற்றைச் சேர்க்கக்கூடாது. கோயிலுக்கு நோயாளர்கள் வருவர். உப்பு நோயை அதிகரிக்கும். வெண்காயம் காம உணர்வை அதிகரிக்கும். விரத நாட்களில் சமைப்பதற்கென்று சில காய்கறி வகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சிவனடியார்கள் பைத்தியக்காரர்களைப் போலவே இருப்பார்கள். அவர்கள் பைத்தியக்காரர்களா...? இதே போல இந்துக்களின் கலை கலாச்சாரமும் வெளியே நின்று பார்ப்போருக்குப் பைத்தியக்காரத்தனமாக இருக்கும், ஆனால் ஆழ்ந்து சிந்தித்தால் தான் அதன் உண்மை புரியும்.

மனித விழுமியங்கள் இன்று அற்றுப்போய்விட்டன. இன்றைய உலகில் யாரையும் நம்ப முடிவதில்லை. பொய்யும் களவும், போலித்தனங்களும் மலிந்துவிட்டன. இவற்றை நீக்க முடியாதா..?

இன்றைய மனிதர்களில் பெரும்பாலனவர்கள் மேற்கூறியபடி கூறிக்கொண்டு பஞ்சமா பாதகங்களைச் செய்து கொண்டே இருக்கிறார்கள். இதை உணர்ந்த கவிஞர் ஒருவர்; "திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்று பாடினார். ஒவ்வொருவரும் நினைப்பை விடுத்துச் செயலில் இறங்கினால் தான் மேற்கூறியவற்றைத் திருத்த முடியும்.

மனிதன் தோன்றிய காலம் முதல் மிருகத்தனமாக வாழ்ந்து வந்ததைப் புராணங்களும் இதிகாசங்களும் கூறுகின்றன. சபையோர் முன் துரியோதனன் திரௌபதியின் துகிலை உரியச் சொன்னான். ஒரு பெண் அங்கங்கள் தெரிய உடை அணிவதே அருவருக்கத்தக்கது. அப்படியிருக்கச் சபையில் ஒரு பெண்ணின் துகிலை உரிய முற்பட்ட துரியோதனன் எப்படிப்பட்டவன்...?

அதைவிட விநாயகபுராணத்தில் முனி பத்தினியின் சாபம் என்றொரு பகுதியுள்ளது. அதில் ருக்மாங்கதன் என்ற அரச குமாரன் வேட்டையாடுவதற்காகக் காட்டிற்குச் சென்றான். அக்காட்டில் கலிமுனிவரின் ஆச்சிரமம் இருந்தது. அதைக்கண்ட ருக்மாங்கதன் அவ் ஆச்சிரமத்திற்குச்

சென்றான். அங்கு முனிவர் இருக்கவில்லை. முனிபத்தினியான முகுந்தை மட்டும் நந்தவனத்தில் இருந்தாள்.

அழகான ருக்மாங்கதன் மீது இச்சை கொண்ட முகுந்தை ருக்மாங்கதனைப் பலாத்காரப்படுத்தினாள். அவன் அவளின் இச்சைக்கு இணங்காததால் அவனது பேரழகு கெட்டு வெண்குஷ்டம் பரவட்டும் என முகுந்தை சாபமிட்டாள். ருக்மாங்கதன் வெண்குஷ்டத்திற்குள்ளாகிப் பெருந் துன்பப்பட்டான்.

பாரதக்கதையில் சகோதரர்கள் பகைவர்களானார்கள்; நண்பர்கள் விரோதிகளானார்கள்; குருமார் மாணவரின் எதிரிகளானார்கள்; தனது பிள்ளைகளைப் போலப் பாண்டவரை நேசிக்க வேண்டிய திருடராட்டினன் தனது பிள்ளைகளின் மேல் கொண்ட பாசத்தினால் இரக்கமில்லாத பாதகனாக நடந்து கொண்டான்.

இப்படி இலக்கியங்களை எடுத்துப் பார்த்தால் ஒவ்வொன்றிலும் மனிதர்கள் தம்மை மறந்து ஒழுக்கந்தவறி நன்றிகெட்டத் தனமாக நடந்து கொண்ட வரலாறு தெரியும். இது இப்பொழுது தான் நடக்கிறதென்று கூப்பாடு போட்டுக் கத்தத் தேவையில்லை.

இவற்றை உணர்ந்த வள்ளுவர் திருக்குறளில் மனித மேம்பாடு பற்றிக் கூறியுள்ளார்.

41. ''இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை''.

இல்வாழ்வான் எனப்படுபவன் அறத்தின் இயல்பை உடைய பிரமச்சாரி, வானப்பிரத்தன், சந்நியாசி ஆகிய மூவரும் நல்வழியில் நிலைபெறத் துணையாவான்.

44. "பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை

வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல்".

பழிக்கு அஞ்சி அறவழியில் பொருள்சேர்த்து அதனைப் பகிர்ந்துண்டு வாழும் இல்வாழ்வானது பரம்பரை என்றும் அழியாது நிலைத்து நிற்கும்.

54. "பெண்ணின் பெருத்தக்க யாவுள கற்பென்னும்

திண்மைஉண் டாகப் பெறின்"?

கற்பு என்னும் உறுதி இல்லாளிடத்து இருக்குமேயானால், அவளைவிடப் பெருஞ்செல்வம் கணவனுக்கு வேறு இல்லை.

57. "சிறைகாக்கும் காப்புஎவன் செய்யும்? மகளிர்

நிறைகாக்குங் காப்பே தலை".

மகளிரை அடக்கி சிறைக் கைதிகளைப் போல் நடத்துவதால் எந்தப் பயனும் ஏற்படமாட்டாது. அவர்கள் தமது நிலையைத் தாமே உணர்ந்து தம் குடும்பப் பெருமையைக் காத்துக்கொள்ளல் வேண்டும்.

இதில் இல்வாழ்வானதும், இல்லத்தரசியினதும் பண்பு கூறப்பட்டுள்ளது. இதன்படி நடந்தால் வீடும் நாடும் சிறக்கும்.

80. “அன்பின் வழியது உயிர்நிலை அ.்.துஇலார்க்கு

என்புதோல் போர்த்த உடம்பு”.

அன்பு வழியில் இயங்கும் உடம்பே உயிர் உள்ள உடம்பாகும். அன்பு இல்லாத உடம்பு எலும்புகளைத் தோல் போர்த்த வெற்றுடம்பு ஆகும்.

81. “இருந்துஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்ஓம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு”.

பொருள்களைத் தேடிக்காத்து இல்வாழ்க்கை நடத்துவதெல்லாம் விருந்தினரைப் பேணி உதவி செய்யும் பொருட்டே ஆகும்.

111. “தகுதி எனஒன்று நன்றே பகுதியால்

பாற்பட்டு ஒழுகப் பெறின்”

தன்னோடு தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவரோடு முறையோடு பொருந்தி நடந்தால் நடுவு நிலைமை என்று கூறப்படும். அது நன்மை பயக்கும்.

122. “காக்க பொருளா அடக்கத்தை; ஆக்கம்

அதனின்ஊஉங்கு இல்லை உயிர்க்கு”.

அடக்கத்தை உயர்ந்த பொருளாகக் கருதி போற்றிக் காக்க வேண்டும். அந்த அடக்கத்தை விட மேம்பட்ட ஆக்கம் உயிர்களுக்கு இல்லை.

131. “ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்

உயிரினும் ஓம்பப் படும்”.

ஒழுக்கம் மேன்மையைத் தருவதால், ஒழுக்கத்தை உயிரிலும் மேலானதாகப் போற்ற வேண்டும்.

146. “பகைபாவம் அச்சம் பழியென நான்கும்

இகவாவாம் இல்இறப்பான் கண்”.

பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு தீமைகளும் பிறன் மனைவியோடு நெறிதவறி நடப்பவனை விட்டு என்றும் நீங்காது.

151. “அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை

இகழ்வார்ப் பொறுத்தல் தலை”.

நிலமானது தன்னை வெட்டுவோரையும் மன்னித்துத் தாங்கிக்கொள்வதைப் போல், தம்மை இகழ்வாரைப் பொறுப்பதே தலைசிறந்த பண்பாகும்.

வள்ளுவரை விட மனித மேம்பாடு பற்றி உலகில் யாரும் கூறவில்லை. வள்ளுவன் கூறிய நெறியில் வாழ்ந்தால் எந்தத் துண்பமும் நேராது. இத்துன்பங்களை நீக்க மேற்கூறிய படி நடத்தல் வேண்டும். நல்லவர்களுடன் நட்புக் கொள்ளல் வேண்டும்.

784. “நகுதல் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்

மேற்சென்று இடித்தல் பொருட்டு”.

நட்புக் கொள்ளுதல் ஒருவரோடு ஒருவர் சிரித்துப் பழகுவதற்கு அல்ல; நண்பர்கள் ஒழுக்கம் தவறும் போது கண்டித்துப் புத்திமதி கூறி திருத்துவதற்காகவே.

உண்மையான நண்பன், தனது நண்பன் தவறு செய்யும் போது கண்டிப்பான். ஆனால் போலியாக நடிப்போர் நண்பன் செய்யும் தவறுகளைக் கண்டிக்காது அவர்கள் செய்வது சரியென்று உற்சாகப்படுத்துவர்.

792. ‘‘ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை

தான்சாம் துயரம் தரும்’’.

நன்கு ஆராயாது நட்புக் கொண்டவனுடைய நட்பு, இறுதியில் அவன் சாவதற்குக் காரணமான துன்பத்தை உண்டாக்கி விடும்.

முன் சொன்னபடி தவறுகளைக் கண்டிக்காது உற்சாகப்படுத்துவோர் நண்பனின் இறப்பை விரும்புபவர்களாகத் தான் இருப்பார்கள்.

812. ‘‘உறின்நட்டு அறின்ஒருஉம் ஒப்பிலார் கேண்மை

பெறினும் இழப்பினும் என்?’’

தமக்குத் தேவையுள்ள போது நட்புப் பூண்டு, பயன் இல்லாத போது நீங்கிச் செல்லும் தகுதியற்றவரின் நட்பைப் பெற்றாலென்ன? இழந்தாலென்ன?

இக்குறளில் வள்ளுவர் வாழ்க்கைத் தத்துவத்தைக் கூறுகின்றார்.

814. “அமரகத்து ஆற்றுஅறுக்கும் கல்லாமா அன்னார்
தமரின் தனிமை தலை”.

போர்களத்தில் தான் சுமந்து வந்தவனைத் தள்ளி விட்டு ஓடும் அறிவில்லாத குதிரையைப் போன்றவர்களின் நட்பை விட நட்பில்லாமல் தனித்திருத்தல் சிறந்தது.

820. “எனைத்தும் குறுகுதல் ஓம்பல் மனைக்கெழீஇ
மன்றில் பழிப்பார் தொடர்பு”.

தனியே இருக்கும் போது மிகுந்த நட்புள்ளவர்களைப் போலப் பழகி, பலர் கூடியுள்ள சபையில் இகழ்ந்து பேசுவோரின் நட்பு நம்மைச் சற்றும் நெருங்காதபடி பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

தமது காரியம் முடியும்வரை நண்பர்களைப் போல நடிப்பவர்களையும், முகஸ்துதி கூறிப் பின் இகழ்வேரையும் விலக்கி விட்டால் ஒருவனுக்குத் துன்பம் உண்டாக வழியில்லை.

முன்பு நான்படித்த கதையொன்று ஞாபகத்திற்கு வருகிறது.

ஆசிரியர் ஒருவர் வகுப்பில் புவியியல் பாடம் கற்பித்துக்கொண்டிருந்தார். அவர் ஒரு உலகப்படத்தை எடுத்து அதை மாணவர்களுக்குக் காட்டினார். பின் அதைப் பல துண்டுகளாகக் கிழித்துவிட்டு மாணவர்களைப் பார்த்துக்கேட்டார்; “இந்தத் துண்டுகளை ஒட்டி உலகப் படமாக யார் தருவீர்கள்...?”

எல்லா மாணவர்களையும் திகைத்துப் போயிருக்க ஒரு மாணவன் துணிவுடன் எழுந்து வந்தான். ஆசிரியர்

வியப்புடன் கிழித்த அத்துண்டுகளை மாணவனிடத்தில் கொடுத்தார்.

அந்த மாணவன் சில நிமிடங்களில் படத்தைச் சரியாக ஒட்டிக்கொண்டுவந்து கொடுத்தான். ஆச்சரியப்பட்ட ஆசிரியர்; “இதை எப்படி இவ்வளவு சீக்கிரம் ஒட்டினாய்?” என்று கேட்டார்.

அதற்கு மாணவன்; “குருவே, உலகப்படத்தில் மறு கரையில் மனிதனின் படம் இருந்தது. மனிதனைச் சரியாக ஒட்டினேன். உலகம் சரியாக வந்தது. மனிதன் ஒழுங்காக இருந்தால் உலகம் சரியாக இருக்கும்” என்றான் மாணவன்.

ஆகையால் உலகில் நடைபெறும் அநியாயங்களைப் பற்றிச் சிந்திக்காது ஒவ்வொருவரும் தாம் தாம் நல்லபடி வாழ வேண்டும் என்று நினைத்தால் உலகம் சிறக்கும்.

இன்று படித்தவர்கள் பாமரர்கள் என்ற வித்தியாசமில்லாது மேல் நாட்டுக் கலாச்சாரங்களைக் கண்மூடிக்கொண்டு பின்பற்றுகிறார்கள். மேலைநாடுகளில் வசிக்கப் பிரியப்படுகிறார்கள். எதைக்கூறினாலும் கேட்கிறார்கள் இல்லை. இதை எப்படித் தீர்ப்பது?

இதைப் பிறநாட்டு மோகம் என்று சொல்லலாம். ஆயிரம் வருடங்களுக்கு முன்பே மக்களிடம் இம் மோகம் இருந்திருக்கிறது. சேர சோழ பாண்டிய மன்னர் கடல் வாணிபம் செய்தனர். பிறநாடுகளுக்குத் தமது நாட்டு உற்பத்திப் பொருட்களைக் கொண்டு சென்றுவிற்றுவிட்டு அந்நாடுகளில் இருந்து அரிய பல பொருட்களைக் கொண்டுவந்தனர். இதை அரசர்களும் பெரும் பணக்காரர்களும் வாங்கித் தமது

மனைவிக்கும், பிள்ளைகள், உறவினர்கள், நண்பர்களுக்கும் கொடுத்தனர். வேறுநாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் ஆடை அணிகலன்களை அணிவது அவர்களது செல்வச் சிறப்பை வெளிப்படுத்துவதாக இருந்தது.

அந்த நாளில் சீனாவில் தயாரிக்கப்பட்ட பட்டாடைகளைத் தமிழ் நாட்டின் அரசர்களும் வணிகர்களும் விரும்பினர். அதைவிடச் சிறந்த பட்டு தமிழ் நாட்டில் உற்பத்தியான போதும் அவர்கள் அதை மதிப்பது குறைவு.

அன்று பாரததேசம் மற்றைய நாடுகளை விட முன்னேறியிருந்தது. கட்டிடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, வார்ப்புக்கலை, வானியல், சோதிடம், விஞ்ஞானம் முதலியவற்றில் பாரதம் முன்னேறியிருந்தது. சிந்துவெளிக் கட்டிடக்கலையைப் போல இன்றும் உலகில் எங்கும் காணமுடியாது.

அன்று வாழ்ந்த மக்கள் வேறு நாடுகளில் இருந்துகொண்டுவந்த உடைகளையும் அணிகலன்களையும் அணிந்தனரே தவிர தமது கலாச்சாரத்தை இன்று போலப் புறக்கணிக்கவில்லை.

உடைகள் அணிவது ஏன்....? மானத்தைக் காக்க, உடலைப் பாதுகாக்க. ஆனால் அதை இன்றைய மக்கள் புரிந்து கொள்ளாது மேலைநாட்டவர்கள் போலவே உடைகளை அணிகிறார்கள்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் பெண்கள் தெய்வங்கள்; பெண்களைக் கண்டதும் தாய், சகோதரி என்ற நினைப்புத் தான் வரவேண்டும். குழந்தைகளைக் கூடத் தெய்வமாக மதிப்பது நமது கலாச்சாரம். மேலை நாட்டில் பெண்கள் போகப் பொருட்கள். அவர்கள் நடுவீதிகளில் அரை

நிர்வானமாகத் திரிவார்கள். அங்கு அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளை இங்கு பெண்கள் அணிய நினைப்பது தான் கேவலமானது.

எப்பொருளும் மறைந்திருந்தால் தான் மதிப்பு அதிகமாகும். மறைந்திருக்கும் பொருளைக் காண ஆவலேற்படும். உணவுப் பழக்கம் உணர்வுகளைத் தூண்டும். உணர்வுகள் அரைகுறை ஆடையை அணியும் விருப்பத்தை உண்டாக்கும். இன்று அங்கங்கள் யாவற்றையும் உடையால் மறைத்துச் செல்லும் பெண்களைக் கண்டால்; ''நாட்டுப்புறத்தவள்; நாகரீகம் தெரியாதவள்'' என்று வயது சென்றவர்கள் கூடச் சொல்வதை நாம் கேட்கிறோம். காலை முதல் மாலை வரை தனது உடல் முழுவதையும் மறைத்திருக்கும் ஒரு பெண், இரவு வந்ததும் தனது கணவனைச் சந்திக்கிறாள். கணவன் அவளின் அழகை இரசிப்பதற்காகப் பலமணி நேரம் ஆவலோடு காத்திருக்கிறான். சந்திக்கும் போது மெய் மறக்கிறான். இதைவிட்டு விட்டு அரைகுறை ஆடைகளுடன் அவளைப் பார்ப்பவனுக்கு அவளைத் தழுவ வேண்டும் என்ற உணர்வு வருமே தவிர இரசிக்கவேண்டும் என்ற உணர்வு வராது. அத்துடன் அவளைப் பார்க்கும் இன்னொருவன் சட்டைக்கு வெளியே தெரியும் முதுகினதும் முன்பக்கத்தினதும் அழகில் மோகமுற்று அவளின் இதர பகுதிகளையும் இரசிக்க ஆவற்படுவான். இதைத் தற்போதைய மேலைநாட்டுக்கலாச்சாரமே உருவாக்குகிறது.

1272. ''கண்நிறைந்த காரிகைக் காம்புஏர்தோள் பேதைக்குப்
பெண்நிறைந்த நீர்மை பெரிது''.

கண்நிறைந்த அழகும், மூங்கில் போன்ற தோளும் உடைய எனது காதலிக்குப் பெண்மைத் தன்மை நிறைந்து விளங்கும் இயல்பு, மிகுதியாக உள்ளது.

இக்குறள் கூறும் பெண்மைத் தன்மை நிரம்பிய பெண் அரைகுறை ஆடைகளுடன் நின்றால் எப்படி இருக்கும். காண்பவர்கள் கலங்கித் துடிக்கமாட்டார்களா....?

முகத்திற்கு, நகத்திற்கு, உடலுக்கு இன்று பூசும் பூச்சுக்களால் உடலுக்குத் தீங்கு ஏற்படுகிறதே தவிர நன்மை ஏற்படுவதில்லை. இச் சாயங்களால் புற்றுநோய் வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்து சமயம் இயற்கையில் இருந்தே சகலவற்றையும் எடுக்கிறது. வாசனைத்திரவியங்கள், பூச்சு வகைகள் யாவும் பூக்களிலிருந்தும், கிழங்குகளிலிருந்தும் பெறப்படுகின்றன. இயற்கையானவை தரமானவை மட்டுமன்றி நோய்களைக் குணப்படுத்துவன. இதை இன்றைய இளைஞர்களும் யுவதிகளும் உணரவேண்டும். இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை. உழைக்க விரும்புபவன் எங்கு சென்றாலும் உழைப்பான்; சோம்பேறி எந்த நாட்டிலும் உழைக்கமாட்டான்.

606. “படியுடையார் பற்றுஅமைந்தக் கண்ணும் மடியுடையார்
மாண்பயன் எய்தல் அரிது”.

நாட்டைஆளும் அரசனின் உறவு தானே வந்து சேர்ந்தாலும் கூடச் சோம்பலுடையவர் ஒரு போதும் சிறந்த பயனை அடைய மாட்டார்.

மனிதன் முன்னேறாமைக்குக் காரணம் அவன் முயற்சி செய்யாமை தான். உலகக் கோடீஸ்வரர்களில் பலர் தமிழ் நாட்டில் இருக்கிறார்கள். இலங்கையிலும் இருக்கிறார்கள்.

எனது நண்பன் ஒருவன் ஆசிரியன். தனியார் கல்வி நிலையம் ஒன்றை வைத்து நடாத்துகிறான். போர்காலச் சூழலிலும் அவனுக்கு வருடாவருடம் ஐந்து இலட்சம் ரூபா இலாபமாகக் கிடைக்கிறது. மாதம் பத்தாயிரம் ரூபாவை அவனுடன் கூடப்படித்தவன் சம்பாதிக்கிறான்.

இராம இராவண யுத்தம் முடிந்த பின்பு இலங்கையின் வனப்பையும் செழிப்பையும் கண்ட அனுமான் இலங்கையில் தங்க ஆசைப்படுகிறான். இராமபிரானையும் அங்கு தங்கிவிடும்படி கேட்கிறான். அதற்கு இராமன் சொல்கிறான்; “ஒவ்வொருவருக்கும் தாய் நாடு தான் சிறந்த நாடு; அது தான் சொர்க்கம். வேறு ஒரு தாய் அழகு மிக்கவளாகவும் செல்வம் உள்ளவளாகவும் இருந்தால் அவளை உனது தாயென ஏற்பாயா...?” என்று கேட்டான்.

முன்பு இந்தியாவை விட்டுப் பர்மா, தென்னாபிரிக்க நாடுகளுக்குச் சென்றோர் பின் அவ்வூர் மக்களால் துரத்தப்பட்ட போது வெறுங்கையுடன் நாடு திரும்பினர். இன்றைய சூழலில் மேலைநாடுகளிலும் போர் மேகங்கள் சூழ்ந்துவிட்டன. அதனால் இங்கிருந்து சென்றவர்கள் அவசரஅவசரமாக நாடு திரும்புகின்றனர். மேலை நாடுகளில் போரையும் அழிவையும் தாங்கமுடியாது மக்கள் துன்பப்படுகின்றனர். மாடிகளை நவீன விமானங்கள் தாக்குவதை நாம் காண்கிறோம். இறைவன் விதித்தபடி யாவும் நடக்கும் என நினைத்தால் எந்தமோகமும் வராது.

தற்போதைய மாணவர்களிடையே ஒழுக்கம் குறைந்து வருகிறது. சமய பாடத்தைப் பாடசாலைகளில் கட்டாய பாடமாக்குவதன் மூலம் இதை நிவர்த்தி செய்யமுடியுமா...?

ஒழுக்கம் தான் சமயம். ஒழுக்கமாக வாழ்வதன் மூலம் தான் ஒருவன் பிறவிப் பெருங்கடலைக் கடந்து இறைவனை அடையலாம் என்று இந்துமதம் கூறுகிறது.

கட்டாயப்படுத்தி, வற்புறுத்தி, சட்டங்களால் எதையும் செய்ய முடியாது.

விருப்பில்லாத ஒருவனுக்கு வற்புறுத்தித் திருமணஞ் செய்து வைத்தால் அவனதும் அவனது இனத்தவர்களதும் வாழ்வு நாசமாகிவிடும்.

பொறியியலாளராக வரவிரும்பும் ஒருவனை வைத்தியராகும்படி தந்தை வற்புறுத்தினால் அவனது கல்வி நாசமாகிவிடும்.

கீரைக்கறி உண்ணாத ஒருவனுக்குக் கீரையின் மகிமைகளைக் கூறி அவனைக் கீரைக்கறியை உண்ணச் செய்தால் அவனுக்கு அஜீரணம் ஏற்படும்.

இது உலகவாழ்வியல் முறை. சமயம் என்பது ஒழுக்கம். ஒரு பிள்ளை பிறக்கும் பொழுதே ஒரு சமயியாகத்தான் பிறக்கிறது. பின் குடும்பமும் சமூகமும் அதற்கு ஒழுக்கத்தினூடாகச் சமயத்தைக் கற்பிக்கின்றன.

ஒழுக்கம் என்பதைப் பற்றி வள்ளுவர் இப்படிக் கூறுகிறார்.

133. ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும்.

குடும்பத்தின் உயர்வும் தாழ்வும் ஒழுக்கத்தில் தங்கியுள்ளது. ஒழுக்கமுடையவனாக வாழுதல் உயர்ந்த குடிமகனின் தன்மை. ஒழுக்கம் தவறி வாழ்தல் ஓர் இழிந்த குடிமகனின் தன்மை.

140. உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்.

உலகத்தவரோடு இணைந்து நடக்கும் முறையைத் தெரிந்து கொள்ளாதவர்கள், பல்வேறு வகையான நூல்களைக் கற்றிருந்த போதிலும் அறிவில்லாதவர் ஆவர்.

இதை விடக் கிராம மக்கள் தான தர்மங்களைப் பற்றியும் நீதியைப் பற்றியும் எப்போதும் கதைப்பார்கள். இதைத் திருவள்ளுவர் கீழ்க் கண்டவாறு கூறுகிறார்.

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

பிறருக்குக் கேடு விளைவிக்கும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக் கூடாது. எண்ணினால் எண்ணுபவனுக்கு அறம் கேட்டை உண்டாக்கும்.

209. தன்னைத்தான் காதலன் ஆயின் எனைத்தொன்றும்
துன்னற்க தீவினைப் பால்

தனது நல்வாழ்வை விரும்பும் ஒருவன் பிறருக்குச் சிறிய தீய செயல்களையும் செய்யாமல் இருத்தல் வேண்டும்.

272. வானுயர் தோற்றம் எவன்செய்யும் தன்நெஞ்சம்

தான்அறி குற்றப் படின்?.

தனது மனம் அறியக் குற்றம் செய்தவன் உயர்ந்த தவக் கோலத்தை உடையவனாக இருந்தாலும் அதனால் எந்தப் பயனும் வராது.

297. பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற

செய்யாமை செய்யாமை நன்று.

பொய்யாமை என்ற அறத்தை உண்மையாகக் கைக் கொண்டு வாழ்பவன் மற்றய அறங்களைச் செய்ய வேண்டியதில்லை.

ஒழுக்கம் என்பது குடும்பத்தில் இருந்து வருவது. ஒழுக்கமுள்ள குடும்பத்தில் சயமபக்தி இருக்கும். ஒருவனது நெஞ்சில் கடவுள் குடிபுகுந்தால் அவன் தீயவற்றை எண்ணமாட்டான்.

குடும்ப ஒழுக்கத்தைப் பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

953. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்

வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.

உண்மையான உயர் குடியில் பிறந்தவர்களுக்கு முகமலர்ச்சி, கொடுத்து உதவும் தன்மை, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை ஆகிய நான்கு பண்புகளும் இயல்பாகவே இருக்கும்.

956. சலம்பற்றிச் சால்புஇல செய்யார்மாசு அற்ற

குலம்பற்றி வாழ்தும்என் பார்.

தம் மாசற்ற குடிப்பண்புகள் அற்றுப் போகும் படி வாழ மாட்டோம் எனக் கருதி வாழ்வோர், வஞ்சனை கொண்டு தகுதியில்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள்.

958. நலத்தின்கண் நார்இன்மை தோன்றின் அவனைக்
குலத்தின்கண் ஐயப் படும்.

ஒருவனது நல்ல பண்புகளுக்கிடையே பண்பற்ற செயல்கள் காணப்பட்டால், அவனது குடிப்பிறப்புப் பற்றி சந்தேகம் ஏற்படும்.

959. நிலத்தில் கிடந்தமை கால்காட்டும்; காட்டும்
குலத்தில் பிறந்தார்வாய்ச சொல்.

நிலம் எத்தன்மையது என்பதை அதில் முளைத்த முளை காட்டும் அது போல ஒருவனது வாய்ச் சொல் அவன் எக் குலத்தவன் என்பதைக் காட்டி விடும்.

ஒழுக்கக்கேடு என்பது மனிதன் தோன்றிய காலத்திலிருந்து உண்டானது. துரியோதனன், இராவணன் போன்றோர் ஒழுக்கமற்றவர்களாகவே வாழ்ந்தனர். கடவுள் பக்தியுள்ள எல்லோரும் ஒழுக்கமானவர்கள் அல்லர். இராவணன் சிவபக்தன். ஆனால் ஒழுக்கம் இல்லாதவன்.

144. எனைத்துணையர் ஆயினும் என்ஆம்? தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்.

தினையளவு கூட ஆராய்ந்து பாராமல் பிறனுடைய மனைவி மேல் மோகம் கொண்டு செல்லுதல், எவ்வளவு பெருமை உடையவர்களானாலும் என்னவாகும்?

146. பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்.

பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு தீமைகளும் பிறன் மனைவியோடு நெறிதவறி நடப்பவனை விட்டு என்றும் நீங்காது.

வள்ளுவர் கூறியபடி இராவணன் பகை, பாவம், அச்சம், பழி என்ற நான்கையும் உடையவனாகவே தன் வாழ்

நாளைக்கழித்தான். இன்றும் அவை அவனை விட்டு நீங்கவில்லை.

விவேகானந்தா் சமய வாழ்வைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறாா்; "தூய்மையுடன் இரு; தன்நலமற்று இரு - இதுவே சமயமாம். சமய வாழ்வின் உட்பொருள்க் கொள்கைகளில் இல்லை. நடைமுறையில் தான் உள்ளது. நல்லவனாக இருப்பது, நல்லதைச் செய்வது. இதில் தான் சமயத்தின் முழுத் தன்மையும் அடங்கியுள்ளது. "இறைவா இறைவா" என்று கதறி அழைப்பதில், அழுவதில் சமயம் இல்லை. இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதில், அவன் விரும்பிய வண்ணம் நடந்து கொள்வதில் தான் சமயம் உள்ளது"

நோ்மையுடனும், சத்தியத்துடனும், தைரியத்துடனும் வாழ்பவன் தான் சமயவான். சமய தத்துவங்கள், சமய நீதிகள், சமயக் கதைகள் யாவற்றையும் நாம் குடும்பத்திலிருந்து அறிந்து கொள்ளலாம். தேவார திருவாசகங்களை ஓதிப் பழகப் பாடசாலை தேவையில்லை. பாடசாலைகளில் ஒருபாடம் என்று சமயத்தைக் கற்காது ஒழுக்கக் கல்வியென்ற முறையில் கற்கலாம். இது தவிரப் பாடசாலைகளில் சமயத்தைக் கட்டாய பாடமாக்குவதன் மூலம் ஒழுக்கத்தை மேம்படுத்த முடியாது.

இதற்கு விவேகானந்தா் கூறிய கதை நல்ல உதாரணமாகும்.

'சத்திய காமன் என்னும் சிறுவன் கல்வி கற்பதற்காக ஒரு குருவை நாடிச் சென்றான். குரு சில பசுக்களை அவனது பொறுப்பில் ஒப்படைத்து, அவனைக் காட்டிற்கு அனுப்பினாா். மாதங்கள் சில சென்றன. நல்ல கவனிப்பால் பசுக்கள் இரண்டு

மடங்காகப் பெருகியிருந்ததைக் கண்டு சத்தியகாமன் ஆசிரியரிடம் திரும்பிச் செல்ல எண்ணினான். வரும்வழியில் ஒரு காளை மாடும், நெருப்பும், சில விலங்குகளும் அவனுக்குப் பிரம்ம ஞானத்தைப் போதித்தன. திரும்பி வந்த சீடனை ஆசிரியர் பார்த்தார். முதல் பார்வையிலேயே இவன் பிரம்ம ஞானத்தை அறிந்துகொண்டான் என்பதை உணர்ந்தார் இயற்கையோடு இணைந்து வாழ்வதாலும், அதனோடு இடையறாது தொடர்புகொள்வதாலும் உண்மையான கல்வியைப் பெறமுடியும் என்பதை அவர் அவனுக்கு உணர்த்தினார்.

விலங்குகள் இயற்கையுடன் இணைந்து வாழ்வதாலும், அதனோடு இடையறாது தொடர்பு கொள்வதாலும் தமக்குத் தேவையான அனைத்தையும் பிறரின் உதவியின்றிப் பெற்றுக் கொள்கின்றன. இந்த நிலையில் அறிவுள்ள மனிதனுக்கு எல்லாவற்றையும் கட்டாயமாக்குவதன் மூலமும் சட்டத்தின் மூலமும் தான் உணர்த்த வேண்டுமா...?

## சோதிடம் உண்மையானதா...? திருமணம் பொருத்தம் பார்த்துத்தான் செய்ய வேண்டுமா...?

சோதிடம் உண்மையானதா பொய்யானதா என்பதை விடச் சோதிடத்தைப் பற்றி அறிந்து கொள்ளல் வேண்டும். சோதிடக்கலை தெய்வீகமானது. அகத்திய முனிவரால் கணிக்கப்பெற்றது. வேதகாலத்தில் வானியல் ஆராய்ச்சி செய்யப்பட்டு ஒரு முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி ஒன்பது கிரகங்கள் உள்ளனவென்றும், ஒவ்வொரு கிரகங்களினதும் குணவியல்புகளும் பண்புகளும் இன்ன தென்றும்

வகுக்கப்பட்டன. அதன்படி தான் இன்றும் சோதிடம் பார்க்கிறார்கள்.

சோதிடம் கூறாதது எதுவும் இல்லை. ஒவ்வொரு நாட்டைப் பற்றியும் கூறுகிறது. அதன் காலநிலை, தரைத்தோற்றம், அங்கு வாழும் மக்களின் நிலை பற்றியெல்லாம் கூறுகிறது. அகத்தியரால் கணிக்கப்பெற்ற சோதிடக்கலையானது பஞ்சாங்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி தான் யாவும் நடைபெறுகின்றன. அமாவாசை, பறுவம், திதிகள், பெருநாட்கள், மழை, காற்று, வெப்பநிலை போன்றன பல்லாயிரம் வருடங்களுக்கு முன் வானில் உலவும் கிரகங்களின் போக்கை ஆராய்ச்சி செய்து எழுதப்பெற்றன. அதன் படியாவும் நடைபெற்று வருவதை நாம் காண்கிறோம்.

வானியலை ஆராய்ச்சி செய்த அகத்தியர் அறுபது வருடங்களைக் கணக்காகக் கொண்டு சகலவற்றையும் வகுத்தார். இந்த அறுபது வருடச் சுற்றுக்குள்த் தான் பல்லாயிரம் வருடங்கள் அடக்கம் பெற்றன. 2007ஆம் ஆண்டான சர்வசித்து வருடம் அறுபது வருடங்கள் கழிந்த பின்பு மீண்டும் 2067ஆம் ஆண்டு திரும்பவும் வரும். இந்த வருடப்பலனே 2067ஆம் ஆண்டிற்கும் இருக்கும்.

ஒரு நாட்டின் பலன் அரசனது பலனைப் பொறுத்தது. குடும்பத்தின் பலன் குடும்பத்தலைவனின் பலனைப் பொறுத்தது.

சோதிடம் உண்மையானதா என்று ஆராய்ந்தால் அது உண்மையானது என்ற விடை தான் வரும். கிரகங்களின் போக்கின்படி தான் உலகில் யாவும் நடைபெறுகின்றன. வெள்ளப் பெருக்கு, சூறாவளி, பூகம்பம், கடல் பெருக்கு யாவும் நடந்த பின்புதான் விஞ்ஞானம் அதைப்பற்றிக் கூறும். ஆனால் இவை நடக்கும் முன்பே அதாவது பலநூறு ஆண்டுகளுக்கு

முன்பே சோதிடம் அவற்றைக் கூறியிருக்கும். அதை யாரும் நம்புவதில்லை.

தனி மனிதன் சோதிடம் பார்க்கத் தேவையில்லை. ஏனெனில் அவன் கருவிலிருக்கு முன்பே அவனது விதி நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவன் செய்த நன்மை தீமைகளுக்கு அமைவாகத்தான் பிறப்பேற்படுகிறது. பிறந்த நேரப்பலன் படி யாவும் நடைபெறும். இதற்குக் கிரகங்கள் உதவி செய்யும்.

ஒருவர் பிறந்ததிலிருந்து இறக்கும் வரை, பின் மறுபிறப்புக்களிலும் அவரவர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்பவே வாழ்க்கை அமையும். யாவும் தீர்மானிக்கப்பட்டவை. புதிதாக நாம் எமது வாழ்க்கையை அமைத்துக்கொள்ள விரும்பினால் நல்ல முறையில் வாழவேண்டும்.

ஓர் உயிரின் பாவ புண்ணியயப் பலன்களுக்கேற்பவே வாழ்க்கைத் துணை வந்தமையும். இன்னார்க்கு இன்னாரென்று இறைவன் தீர்மானித்து வைத்துவிடுவான். அது காதலாகவோ அன்றி ஒழுங்கு செய்யப்பட்ட திருமணமாகவோ அமையும்.

எனது நண்பரின் மகளுக்குப் பத்து வருடங்களுக்கு முன்பு ஒரு திருமணம் பேசப்பட்டது. மாப்பிள்ளையின் உத்தியோகம் போதாது என்பதனால் அத்திருமணத்தை நண்பர் விரும்பவில்லை. பல காலமாக மாப்பிள்ளை தேடினார். மாப்பிள்ளை அகப்படவில்லை. கடைசியாகப் பத்து வருடங்களுக்கு முன் பேசிய மாப்பிள்ளையையே தனது மகளுக்குச் செய்து கொடுத்தார். இதிலிருந்து என்ன தெரியவருகிறது...?

இறைவன் தீர்மானிக்கிறான். அவை உரிய நேரத்தில் நடைபெறுகின்றன. காதலித்துத் திருமணம் செய்யும் எவரும்

பொருத்தம் பார்ப்பதில்லை. திருமணமான பின் பொருத்தம் பார்த்தால் அவர்களின் சாதகங்கள் மிகவும் பொருத்தமுள்ளவையாக இருக்கும்.

இராமனுக்கும் சீதைக்கும் பொருத்தம் பார்க்கவில்லை.

நளனுக்கும் தமயந்திக்கும் பொருத்தம் பார்க்கவில்லை.

அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் பொருத்தம் பார்க்கப்படவில்லை.

சிவனுக்கும் உமைக்கும், முருகனுக்கும் வள்ளி தெய்வானைக்கும் பொருத்தம் பார்க்கப்படவில்லை.

ஒருவன் ஒரு பெண்ணை விரும்பினால் அங்கு பொருத்தம் இருக்கும். இதை நான் பலரிடம் கண்டுள்ளேன்.

காதலித்துத் திருமணஞ் செய்வோரை விடப் பொருத்தம் பார்த்துத் திருமணம் செய்வோர் தான் அதிகம். இது சீர்வரிசைக்காகத் தான் முக்கியமாக நடைபெறும். பெண்ணையோ மாப்பிள்ளையையோ பிடிக்காவிட்டாலும் சீதனத்திற்காகவும் உத்தியோகத்திற்காகவும் நடைபெறும் திருமணங்கள் தான் அதிகம். சீதனம் தேவையில்லை என்று ஓர் ஆணும், உயர்ந்த உத்தியோகம் தேவையில்லை என்று ஒரு பெண்ணும் முடிவெடுத்தால் பொருத்தம் பார்க்கத் தேவையில்லை.

தாலிப் பொருத்தம் இல்லாவிட்டால் சிவன் கோயிலில் திருமணம் செய்யலாம் என்கிறார்கள். இல்லாவிட்டால் தாலியைக் கோர்க்காமல் கொடியைக் கட்டலாம் என்கிறார்கள். இல்லாவிட்டால் கதலி வாழைக்குத் தாலிகட்டிய பின் பெண்ணுக்குத் தாலிகட்டலாமென்றும் பெரியவர்கள் கூறியுள்ளனர். இதைவிடப் பலர் கோயிலில் பூக்கட்டிப் பார்த்துவிட்டுத் திருமணம் செய்கிறார்கள்.

எந்த ஓர் உறவும் காரண காரியமின்றி நிகழாது. ஒருவன் தனது வீட்டில் மிருகங்களை வளர்க்க வேண்டும் என்றாலும் அதற்குக் கிரகபலன் இருத்தல் வேண்டும். ஒரு மனிதனின் வாழ்வில் ஏற்படும் அனைத்து மாற்றங்களும் அவர்களது புண்ணிய பாவங்களுக்கமைவாக நடைபெறுமே தவிர, தற்செயலாகவோ வேண்டுமென்றோ நடைபெறமாட்டாது. இந்நிலையில் மனிதனின் வாழ்வை நிர்ணயிக்கும் திருமணம் அவன் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்றபடி இறைவனால் அமைத்துக் கொடுக்கப்படும். இதற்குப் பொருத்தம் பார்த்தாலென்ன பார்க்காவிட்டாலென்ன நடப்பது தான் நடக்கும்.

## விதி முறைப்படி தான் கடவுளை வணங்க வேண்டுமா....?

ஒழுங்காகவும் ஒழுக்கமாகவும் வாழ்வதற்காகவே பெரியவர்களால் விதிகள் அமைக்கப்பட்டன. வீதியில் செல்லும் வாகனங்களுக்கு விதிமுறைகள் வகுக்கப்படாவிட்டால் என்ன நடைபெறும் என்று நினைத்துப் பாருங்கள்.

திருமணம் யார் யாரையும் செய்யலாம் என்றால் மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் வித்தியாசம் எதுவும் இல்லாமற் போய்விடும்.

பெரியவரைக் கண்டால் மதிப்பளித்தல், குருவைக் கண்டால் மரியாதை செய்தல், பெற்றோரை வணங்குதல், கோயில் மணியோசை கேட்டதும் கடவுளின் நாமத்தை உச்சரித்தல் இவை யாவும் ஒழுக்கமாக வாழ வழிவகுக்கும். சம்பந்தப்பட்டவர்களிடையே அன்னியோன்னியத்தையும் அன்பையும் அதிகரிக்கச் செய்யும். குருவை ஒருவன் மதிப்பதைக் காணும் மற்றவனுக்கும் குருவை

மதிக்கவேண்டுமென்ற எண்ணம் உண்டாகும். பின் பற்றுதல் மூலமே வாழ்வின் பெரும்பாலான நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

இறைவன் எளிமையானவன், எங்கும் இருப்பவன். அவன் வெளிவேஷங்களை நம்புவதில்லை. அதனால் ஒருவன் தான் விரும்பியவாறு வழிபடலாம். கோயிலுக்குச் சென்று வழிபடலாம்; வீட்டில் பூசை அறை அமைத்து வழிபடலாம். சிலர் வீடுகளில் சிறு தெய்வங்களுக்குக் கோயில் அமைத்து வழிபடுகின்றனர். விதிகளுக்கமையத்தான் நாம் வழிபட வேண்டுமென்று இல்லை.

ஆனால் விதிகளுக்கமையக் கடவுளை வணங்குவதால் மனிதனுக்குப் பலவகையான நன்மைகள் கிடைக்கின்றன. சமய விதிகள் யாவும் ஆரோக்கியத்திற்கான ஒழுங்குகளே. காலைக் கடன்களை முடித்துவிட்டு, குளித்துக் கடவுளை வணங்கவேண்டும். மாலை நேரங்களில் முகம் கை, கால் கழுவிய பின்பு தான் கடவுளை வணங்குதல் வேண்டும். இது மனிதனின் ஆரோக்கியத்திற்கான வழி.

இந்து சமய வணக்க முறைகள் யாவும் உடல் ஆரோக்கியத்திற்கான பயிற்சிகளே. தோப்புக்கரணம் போடுதல் மிகமிகச் சிறந்த பயிற்சியாகும். இதைச் செய்வதன் மூலம் மூட்டுக்களில் படிந்திருக்கும் கொழுப்புக்கள் அற்றுப்போம்; தசை இறுக்கமடையாது. வீதியைச் சுற்றி நடத்தல் பயிற்சியாகும். இன்றைய வைத்தியர்கள் நோயாளிகளைத் தினமும் மூன்று அல்லது நான்கு மைல்கள் நடக்கும்படி கூறுகிறார்கள்.

எழுபத்தைந்து வயதிலும் இச் சமய விதிமுறைகளைப் பின் பற்றுவோர் இளைஞர்களாகவே உள்ளனர். இவர்கள் தமது எல்லா அவயங்களையும் ஆட்டி அசைக்கக்கூடியவர்களாக இருக்கின்றனர். இவற்றைப் பின்பற்றாதோர் நாற்பது

நாற்பத்தைந்து வயதில் குனிய நிமிர முடியாது அவதிப்படுகின்றனர்.

சமய விதிமுறைகள் மனிதனின் இன்பமான வாழ்க்கைக்கு வழிகோலுவன. அதனால் தான் பெரியவர்கள் இவற்றைச் சமய விதிகளெனக் கூறி, அவற்றை முறையாகக் கைக்கொள்ளும் படி வற்புறுத்துகின்றனர். கடவுளை எவ்வாறு வழிபட வேண்டும் என்று ஆறுமுகநாவலர் அவர்கள் கூறியுள்ளார். அதைப் பின்பற்றுவதன் மூலம் நாம் ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழலாம்.

இறைவன் அன்பை மட்டும் எதிர்பார்ப்பான். தன்மீது வைக்கும் அன்பைப் பிற உயிர்கள் மீதும் வைக்க வேண்டும் என்பதே அவனது விருப்பம். அவனை வணங்கும் போது ஒரு பூவை வைத்தாலே போதும். விதி முறைப்படி வணங்குபவன் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்வான். விதிகளின் நோக்கம் நோய்களை அகற்றலே. இதனால் தான் ஔவையார், “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்றார்.

நல்ல நூல்கள் பலவற்றைக் கற்றோர், பணவலிமை உடையோர், மனவுறுதியுடையோர், அறிவாளிகள், ஞானிகள் போன்றோர் வாழ்க்கையில் பல சந்தர்ப்பங்களில் தோல்வியடைகின்றனர். இது ஏன்....?

ஒவ்வொருவரும் தாம் தாம் இருக்கும் நிலைக்கு அவர்களே பொறுப்பாளிகளாவார்கள். ஒருவன் நல்ல முறையில் ஒழுக்கமாக வாழவேண்டும். மற்றவர்களுக்கு மனதாற்கூடத் தீங்கு செய்தல் ஆகாது என்று நினைத்து வாழ்வானானால், அப்படி வாழவேண்டிய தன்மையைத் தானே அமைத்துக்

கொள்வான். அந்த ஆற்றல் அவனது மனதிற்கு உண்டு. ஓர் இந்து தான் வாழும் வாழ்க்கையானது முன்வினைப் பயனால் வந்தது என்று நினைப்பானேயானால், எதிர்கால வாழ்க்கையை நன்கு திட்டமிட்டு அமைத்துக் கொள்ள முடியும். செயல்கள் நல்லவையானால் பலனும் நல்லதாகவே அமையும். ஆகையால் நல்ல நூல்களைக் கற்பதனாலேயோ, மனவுறுதி உடையவனாக இருப்பவனாலேயோ, அறிவாளிகளாக இருப்பவர்களினாலேயோ, ஞானிகளாலேயோ நல்ல வாழ்க்கையைப் பெறமுடியாது. படித்தவர்கள் தான் பெரும்பாலும் பெருந் தவறுகளைச் செய்கிறார்கள். மனவுறுதி நற்செயல்கள் செய்வதிலும், ஒழுக்கமாக வாழ்வதிலும் இருத்தல் வேண்டும். ஞானியாக வாழ்பவன் எப்படி வாழவேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

350. பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

பற்றில்லாதவனாகிய இறைவனின் மீது மட்டும் பற்றுக் கொள்ளல் வேண்டும், உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கு அப்பற்றைப் பற்றுதல் வேண்டும்.

துறவி எப்படியாக வாழக்கூடாது என்றும் வள்ளுவர் கூறுகிறார்.

274. தவம்மறைந்து அல்லவை செய்தல் புதல்மறைந்து
வேட்டுவன் புள்சிமிழ்த் தற்று.

தவக் கோலத்தில் மறைந்து கொண்டு ஒருவன் தீய செயல்களைச் செய்வது புதரில் மறைந்திருந்து வேடன் வலை வீசிப் பறவைகளைப் பிடித்தலைப் போன்றது.

கல்வி என்றால் என்னவென்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார்; ‘‘கல்வி என்றால் என்ன? அது புத்தகங்களைப் படிப்பதா..? இல்லை. அல்லது அது பலவிதமானவற்றைக் குறித்த அறிவா...? அதுவும் இல்லை. எத்தகைய பயிற்சியின் மூலம் மனவுறுதியின் வேகமும் அதன் வெளிப்படும் தன்மையும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு, பயன்தரும் வகையில் அமைகின்றதோ, அந்தப் பயிற்சி தான் கல்வியாகும்’’.

‘‘கல்வியென்பது மூளைக்குள் பல விஷயங்களைப் போட்டுத் திணித்து வைப்பதல்ல. வாழ்க்கையை உருவாக்கக்கூடிய, நல்ல ஒழுக்கத்தை வளர்க்கக்கூடிய கருத்துக்களைக் கிரகித்து அவற்றைத் தம்முடையதாக்கிக் கொள்வது தான் கல்வி’’

‘‘நீ ஐந்தே ஐந்து உயர்ந்த கருத்துக்களைக் கிரகித்துக் கொண்டு, அவற்றை உன்னுடைய வாழ்க்கையிலும் நடத்தையிலும் ஊடுருவி நிற்கச் செய்தால் ஒரு பெரிய புத்தகசாலை முழுவதையும் மனப்பாடம் செய்திருப்பவனை விட நீயே அதிகம் கல்வி கற்றவனாவாய்’’

விவேகானந்தர் கல்வியைப் பற்றி மேற்கண்டவாறு கூறியது தான் உண்மை. நல்ல பல நூல்களைக் கற்பதை விட அவற்றில் கூறப்பட்ட சிலவற்றையாவது பின்பற்றுவதே சிறப்பானது. நூல்களைப் பொழுது போக்கிற்காகவும், பரீட்சையில் சித்தி பெறுவதற்காகவும், பட்டங்களைப் பெற்றுத் தொழில் பெறுவதற்காகவும் தான் அனேகர் கற்கிறார்கள். இதனால் அவர்கள் தொழிலுக்குத் தகமை பெற்றாலும் வாழத் தெரியாதவர்களாகவே பெரும்பாலானோர் இருக்கிறார்கள். இதனால் தான் இவர்கள் தோல்வியடைகிறார்கள்.

பணமுடையோர் பணத்தால் எல்லாவற்றையும் சாதிக்கலாமென்று எண்ணுகிறார்கள். அதனால் தர்மத்திற்கு முரணான பல செயல்களை அவர்கள் செய்கிறார்கள். தமது எண்ணம் நிறைவேற வேண்டும் என்பதற்காக அவர்கள் எதையும் செய்யத் துணிகிறார்கள்.

ஒருவனது மனமும் செயல்களும் தூய்மையுடையதாகவும், சிறந்ததாகவும் இருந்தால் தான் அவனது வாழ்க்கை இன்பமுடையதாக அமையும். மனிதனுக்கு மன அமைதியைப் பணம் கொடுத்தல் வேண்டும். எப்பொழுதும் பணத்தை மனம் வெற்றி கொள்ளவேண்டுமே தவிரப் பணம் மனதை வெற்றி கொள்ளக் கூடாது. பணம் மனதை வெற்றி கொண்டு தன் போக்கில் மனிதனைச் செயற்பட வைத்தால் தோல்வி தான் கிடைக்கும்.

ஒவ்வொருவனும் தனது விதியைத் தானே அமைத்துக் கொள்கிறான். கடவுள் மனிதனுக்குள்ச் சகல ஆற்றல்களையும் புதைத்து வைத்திருக்கிறார். அதனை உணர்ந்து மனிதன் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும். தொண்ணூறு சதவீதமான மனிதர்கள் தம்முள் இருக்கும் ஆற்றல்களை உணர்ந்து கொள்வதேயில்லை. இதனால் தான் தோல்விகள் ஏற்படுகின்றன.

சுவாமி விவேகானந்தர் ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு நாடும் பெருமை அடைவதற்கு மூன்று விடயங்கள் அவசியமென்கிறார். அவையாவன,

1. நன்மைதரக்கூடிய சக்திகளில் உறுதியான நம்பிக்கை.
2. பொறாமையும் சந்தேகமும் இல்லாதிருத்தல்.

3. நல்லவர்களாக இருக்கவும், நன்மை செய்யவும் முயற்சி செய்யும் அனைவருக்கும் உதவி புரிதல்.

மனவுறுதியுடையோர், அறிவாளிகள், ஞானிகள் போன்றோர் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் மனவுறுதி உள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். சில வேளைகளில் பலவீனமடைந்து விடுவார்கள். பலவீனம் தோல்வியைத் தரும்.

அறிவைப் பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

422. சென்ற இடத்தால் செலவிடா தீதுஒரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு.

மனத்தைச் சென்ற இடத்தில் செல்ல விடாமல், தீமைகளிலிருந்து விலக்கி நல்வழிப்படுத்துவதே அறிவு ஆகும்.

423. எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

எப்பொருளை யார்யாரிடம் கேட்டாலும், அப்பொருளின் உண்மைத் தன்மையை அறிந்து கொள்வதே அறிவாகும்.

உறுதியைப் பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்.

661. வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற.

ஒரு தொழிலின் உறுதி என்று சொல்லப்படுவது செய்பவனுடைய மனவலிமையே ஆகும். மற்றவையெல்லாம் வேறானவையாகும்.

666. எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

எண்ணிய எண்ணப்படி செயலாற்றுவதில் ஒருவர் உறுதியாக இருந்தால், அவர் எண்ணியவற்றை எண்ணியவாறே அடைந்தே தீருவர்.

மனத்தூய்மை, நிலத்தைப் போன்ற பொறுமை, தொடர்ந்து முயற்சித்தல் என்பனவே வெற்றியின் படிகளாகும். தோல்வி மனிதனை முயற்சியுள்ளவனாக்கும். பல தகவல்களை தரும்புத்தகம் அது. அதனால் தோல்வியடைந்த போதும் மனம் தளராது முயற்சிப்பவன் தோல்வியேற்படாத வெற்றியை அடைவான்.

மனவுறுதி, அறிவு, பணவலிமை, தவவலிமை போன்றவை இருந்தாலும் ஆசைவசப்பட்டால் தோல்வி தான் உண்டாகும். இதற்கு இதிகாச புராண நாயகர்கள் உதாரண புரிசர்களாகத் திகழ்வதை நீங்கள் அறியவில்லையா...?

## மனதைத் தூய்மையாக வைத்திருப்பது எப்படி?

உலகில் உள்ள அனைத்தையும் தூய்மையானதாகவே இறைவன் படைத்தான். அவற்றை மாசுபடுத்துவது மனிதன் தான்.

வானம், கடல், ஆறுகள், குளம், குட்டை, நீரோரிகள் யாவும் மனிதனில்லாவிட்டால் தூய்மை மிகுந்தனவாகவே இருக்கும்.

மனிதமனமும் தூய்மையானதாகவே படைக்கப்பட்டது. உளவியலாளர் ஒருவர்; "குழந்தையின் மனம் வெள்ளையடிக்கப்பட்ட சுவரைப் போன்றது" என்று சொல்லியிருக்கிறார்.

மனித மனம் எப்பொழுதும் சுத்தமாகவே இருக்கும். அதை மாசுபடுத்துவது அவர்கள் தான். ஒவ்வொருவரும் செய்யும் தீய செயல்கள், அவர்கள் எண்ணும் தீய எண்ணங்கள் தான் மனதை மாசுபடுத்துகின்றன.

வள்ளுவர் மனதைத் தூய்மையாக வைத்திருப்பது எப்படியென்று பல்வேறு குறள்களில் கூறுகிறார்.

74. அன்புஈனும் ஆர்வம் உடைமை; அதுஈனும்
நண்புஎனும் நாடாச் சிறப்பு.

அன்பு எல்லோரிடமும் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும். அந்த அன்பு, நட்பு என்ற அளவற்ற சிறப்பினையும் தரும்.

எல்லோரிடத்திலும் அன்பாக இருந்தால் மனம் எப்போதும் தூய்மையானதாக இருக்கும்.

92. அகன்அமர்ந்து ஈதலின் நன்றே முகன்அமர்ந்து
இன்சொலன் ஆகப் பெறின்.

மனம் மகிழ்ந்து பொருள் கொடுப்பதைவிட முகமகிழ்ச்சியோடு இனிமையாகப் பேசுவதே நன்று.

முகம் மலர்ந்து இனிய சொற்களைப் பேசினால் மனம் எப்போதும் தூய்மையானதாக இருக்கும்.

121. அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

அடக்கம் ஒருவனை உயர்த்தி தேவர்கள் வாழும் சொர்க்க வாழ்வைத் தரும். அடக்கமின்மை பொல்லாத இருளடைந்த நரக வாழ்வைத் தரும்.

அடக்கமுடையவராக இருந்தால் மனம் எப்பொழுதும் தூய்மையானதாக இருக்கும்.

165. அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்
வழுக்கியும் கேடுஈன் பது.

பொறாமை உள்ளவர்களுக்கு வேறு பகை தேவையில்லை. அது ஒன்றே போதும். பகைவர் தீங்கு செய்யாவிட்டாலும் தவறாமல் தீங்கை அது செய்யும்.

பொறாமை இல்லாதவராக இருந்தால் எப்பொழுதும் மனம் சுத்தமாக இருக்கும்.

178. அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

ஒருவனது செல்வம் குறைவடையாமல் இருக்க வேண்டுமானால் அவன் பிறனுடைய கைப்பொருளை விரும்பாதிருத்தல் வேண்டும்.

179. அறன்அறிந்து வெஃகா அறிவுடையார்ச் சேரும்
திறன்அறிந்து ஆங்கே திரு.

அறநெறியை அறிந்து பிறர்பொருளை விரும்பாத அறிவுடையாரை செல்வம் தேடிச் சென்றடையும்.

பிறர் பொருளை விரும்பாதிருப்பவன் வீட்டில் திருமகள் வாழ்வாள். அதனால் பிறர் பொருளை விரும்பாதவனது மனம் சுத்தமாக இருக்கும்.

196. பயன்இல்சொல் பாராட்டு வானை மகன்எனல்
மக்கட் பதடி எனல்

பயனில்லாத சொற்களைப் பேசுகின்றவனை மனிதன் என்று சொல்லக்கூடாது; அவனை மக்களுள் பதர் என்று சொல்லல் வேண்டும்.

பயனில்லாத சொற்களைப் பேசாதவர்களின் உள்ளம் என்றும் சுத்தமாகவே இருக்கும்.

204. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு.

பிறருக்குக் கேடு விளைவிக்கும் தீய செயல்களை ஒருவன் மறந்தும் எண்ணக் கூடாது. எண்ணினால் எண்ணுபவனுக்கு அறம் கேட்டை உண்டாக்கும்.

தீமைகளைச் செய்ய அஞ்சுபவனின் உள்ளம் என்றும் சுத்தமாகவே இருக்கும்.

295. மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை.

ஒருவன் தன் மனம் அறிய உண்மை பேசி வாழ்ந்தானே யானால், அவன் தவத்தோடு தானமும் செய்வாரை விட உயர்ந்தவன்.

உண்மை பேசுபவனின் மனம் எப்பொழுதும் தூய்மையானதாகவே இருக்கும்.

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும்.

யாரிடத்திலும் சினங்கொள்ளாமல் அதை மறத்தல் நன்று. தீமையான விளைவுகள் பல சினத்தால் வந்து சேரும்.

304. நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்
பகையும் உளவோ பிற?.

முகமலர்ச்சியையும் அகமகிழ்ச்சியையும் கொல்கின்ற சினத்தை விட ஒருவனுக்குப் பகையானவை வேறு உள்ளனவோ?.

கோபங்கொள்ளாதவனின் மனம் எப்பொழுதும் தூய்மையானதாகவே இருக்கும்.

360. காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்.

காமம், சினம், அறியாமை ஆகிய மூன்று பெருங் குற்றங்களையும் அடியோடு ஒழித்து விட்டால், துன்பங்கள் வராமல் கெடும்.

367. அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டும் ஆற்றான் வரும்.

ஒருவன் அவாவை ஒழித்தால், அவன் இன்பமாக வாழ்வதற்கு உரிய எல்லா நன்மைகளும், அவன் விரும்புமாறு வந்தடையும்.

368. அவாஇல்லார்க்கு இல்லாகும் துன்பம் அ∴துஉண்டேல்
தவாஅது மேன்மேல் வரும்.

அவா இல்லாதவர்களுக்குத் துன்பம் வராது. அவா இருந்தால் எல்லாத் துன்பங்களும் மேலும் மேலும் தொடர்ந்து வரும்.

369. இன்பம் இடையறாது ஈண்டும் அவாவென்னும்
துன்பத்துள் துன்பம் கெடின்.

அவா என்ற துன்பங்களுள் கொடிய துன்பம் இல்லாதிருந்தால் இன்பம் இடையறாது தொடர்ந்து வரும்.

370. ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்.

ஒரு பொழுதும் நிறைவான தன்மையைப் பெறாத அவாவை ஒழித்தால், அந்நிலை எப்பொழுதும் மாறாதிருந்து இன்ப வாழ்வைத் தரும்.

ஆசைகளை ஒழித்தால் மனம் சுத்தமாக இருக்கும்.

வள்ளுவன் சொன்னபடி வாழ்ந்தால் மனிதன் தேவனாகிவிடுவான். அதனால் அவனுக்கு விருப்பு வெறுப்பு இருக்காது. விருப்பு வெறுப்பில்லாதவன் மனித வாழ்வைச் சுவைத்து மகிழ்வான். அவனது மனம் சுத்தமாக இருக்கும். அதனால் அவனுக்கு நோய் இராது. கவலைகள் கஷ்டங்கள் இராது. கடவுளின் நினைப்பே இருக்கும்.

பயம் எதனால் உண்டாகிறது? பேய், பிசாசு, பில்லி சூனியம் என்பவை உண்மையா.....?

அறியாமை, பலவீனம், நம்பிக்கையின்மை, அதீத கற்பனை, தீய செயல்களைச் செய்தல், சட்டத்தை மதிக்காமை, மூட நம்பிக்கைகள் ஆகியவற்றால் மனதில் பயம் உண்டாகும்.

ஒருவனது நல்வாழ்வு அவனது நற்செயல்களாலேயே உருவாக்கப்படுகிறது. எனது செயல்கள் தான் என்னை முன்னேற்றும் என்று நினைப்பவன் பயப்படமாட்டான்.

எதை நீ உருவாக்குகிறாயோ அதை நீ தான் அகற்ற வேண்டும். அதை மற்றவர்களால் அகற்ற முடியாது. உனது மனதில் தேவையில்லாத பயம் உண்டானால் அதை நீ தான் அகற்ற வேண்டும். அச்சம் தான் மரணம் என்பதை எல்லோரும் நினைவில் வைத்திருத்தல் வேண்டும்.

தனக்குள்ள அறிவைப் பயன்படுத்தாமல் மூடக்கொள்கைகளை நம்புபவன் அச்சத்திற்குட்படுகிறான்.

பகுத்தறிவைப் பயன்படுத்தி ஒவ்வொன்றையும் ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். நல்ல நூல்களில் கூறப்பட்ட விடயங்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

சைவ சித்ததாந்தக் கொள்கைப் படி ஓர் உயிர்உடலை விட்டுப் பிரிந்ததும் இரண்டு நிலைக்குட்படும். ஒன்று அது தனது கர்ம வினைக்கேற்ப மறுபிறப்பெடுக்கும். மற்றது கடவுளின் அடியைச் சேரும்.

கடவுளை நம்பித் தினமும் கோயிலுக்குச் செல்பவன் சமயக் கொள்கைகளை நம்பாது மூடநம்பிக்கைகளை மனதில் வளர்ப்பதால் தான் பயம் உண்டாகிறது. கடவுள் என்னைக் காப்பாற்றுவர் என்று கடவுளின் மீது நம்பிக்கை வைப்பவனுக்குப் பயம் உண்டாகாது. பேய், பிசாசுகள், பில்லி, சூனியம் ஆகியவற்றில் நம்பிக்கை ஏற்படாது.

பயம் என்பது பலவீனத்தால் உண்டாகிறது. தவறானவற்றை மீண்டும் மீண்டும் எண்ணுவதால் பயம் அதிகரிக்கிறது. அதனால் தேவையில்லாத விஷயங்களை எண்ணுதல் கூடாது.

தவறுகளைச் செய்வோர் அத்தவறுகளால் தமக்குத் தண்டனை கிடைத்துவிடுமோ என மீண்டும் மீண்டும் எண்ணுகிறார்கள். அரச ஊழியன் ஒருவன் தனது காரியத்தில் உள்ள பொருளொன்றைத் திருடினால், அதனால் தனது வேலைக்குப் பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ எனப் பயப்படுகிறான். இப்படியான பயம் அவனது மனதைக் குழப்பிவிடும்.

ஒருவன் மிகுந்த நம்பிக்கையுடையவனாக இருந்தால் பயம் அவனது வாழ்வில் குறுக்கிடாது. ஒவ்வொருவனது மனத்துக்குள் இருப்பது தான் அவர்களின் செயல்களிலும் இருக்கும். இந்த உண்மை, வேதாந்தத்தின் அனுஷ்டானங்களில் ஒன்றாக உள்ளது.

ஒவ்வொரு மனிதனின் மனத்தில் உள்ள நம்பிக்கை தான் கடவுள் என்ற ஒருவர் இருக்கிறார் என்பதை உறுதி செய்கிறது. கடவுள் மனதில் இருந்தால் பயம் ஏற்பட நியாயமில்லை. மனிதர்கள் எல்லோரும் பகுத்தறிவைப் பயன்படுத்துதல் வேண்டும். பகுத்தறிவைப் பயன்படுத்தினால் அறியாமை விலகிவிடும்.

மனிதன் பேய், பிசாசு, பில்லி சூனியம், இரவு, விஷயந்துக்கள் என்று பலவற்றிற்குப் பயப்படுகிறான். இவற்றிற்கு மிருகங்கள் பயப்படுவதில்லை. இதற்குக் காரணம் தேவையற்ற எண்ணங்கள் அவற்றிற்கு இல்லை.

பேய், பிசாசு என்று எவையும் இல்லை. அதா்வன வேதம் தான் இவற்றைப் பற்றிக் கூறுகிறது. வைதீக சமயங்கள் அதா்வண வேதத்தைப் பெரிதாகப் பொருட்டுத்துவதில்லை.

பில்லி, சூனியம் செய்து ஒருவனைக் கெடுக்க முடியாது. அப்படிக் கெடுக்க முடியுமானால் காவல்துறை, நீதிமன்றம் எவையும் தேவையில்லை. அத்துடன் இன்பப் பூங்காவாக இருக்கும் வாழ்வு நரகமாகிவிடும்.

இறைவன் ஐந்தொழில்களையும் செய்பவன். இத்தொழில்களை வேறு எவராலும் செய்ய முடியாது. பில்லி சூனியம் என்பவை உண்மையானால் நாம் வழிபடும் ஆலயங்கள் எதற்கு? அவற்றில் பூசைகள் ஏன்? மனித மனங்களில் புதைந்திருக்கும் அறியாமையை நீக்குவதே சமயத்தின் பணியாகும். மனிதனுக்கு மன அமைதியைத் தருவது கடவுள் வழிபாடு. அது அச்சத்தை அகற்றி மன மகிழ்வைத் தந்து இம்மையிலும் மறுமையிலும் மனிதனை இன்பமாக வாழவைக்கும். எப்பொழுது ஒரு மனிதன் இன்பமாக வாழ்கின்றானோ அப்பொழுது அவன் பயத்தை அகற்றியவனாக இருப்பான்.

சிவசின்னங்களை அணிபவா்களுக்குப் பயமிராது. அவா்களைப் பேய் பிசாசுகள் அணுகாது.

தேவார திருவாசகங்களை ஓதினாலும் பயமேற்படாது. பேய் பிசாசுகள் அணுகாது.

கந்தசஷ்டிக் கவசத்தைத் தினமும் ஓதினால் பயமுண்டாகாது. பேய் பிசாசுகள் அணுகாது.

இப்படிச் சமய ஞானிகள் கூறியுள்ளனா். சமயத்தில் நம்பிக்கை உள்ளவா்கள் இவற்றிற்கெல்லம்

பயப்படமாட்டார்கள். பயப்படுபவர்கள் கடவுளை நம்பாதவர்களாக இருத்தல் வேண்டும்.

சமய வாழ்க்கையின் வெற்றி, சமய கொள்கைகளில் இல்லை. அதை அனுஷ்டிப்பதில் தான் தங்கியுள்ளது. மனவுறுதியுடனும் தூய்மையுடனும் சமய சம்பிரதாயங்களை அனுஷ்டிப்பது தான் சமயத்தைக் கைக்கொள்பவனின் கடமை. விரதங்களை அனுஷ்டித்துக்கொண்டு சமயத்திற்கு முரணான சம்பிரதாயங்களைக் கைக்கொண்டால் பயம், பீதி, அச்சம் யாவும் மனதுள் குடியிருந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கும். அதனால் சமயக் கொள்கைகளில் உறுதியாக இருங்கள்.

## ஆறாவது அறிவு மனிதனுக்கு இல்லாதிருந்தால் உலகம் எப்படி இருக்கும்?

பெரியவர்கள், மிருகங்கள் ஐந்து அறிவு உள்ளனவென்றும், மனிதர்கள் ஆறாவது அறிவான பகுத்தறிவையும் தன்னகத்தே கொண்டவர்களென்றும் சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

ஆறாவது அறிவான பகுத்தறிவைப் பெரும்பான்மையான மக்கள் பாவிப்பதில்லை. பகுத்தறிவு மிக்க பெரியவர்கள், அறிஞர்கள், ஞானிகள் முதலானோர் கூறிய அமுத மொழிகளைப் பற்றியும் சிந்திப்பதில்லை.

மிருகங்கள் இவற்றைப் பற்றிச் சிந்திக்கின்றன. நன்றிமறவாமை, அன்பு, சேவை மனப்பான்மை, அர்ப்பணிப்பு, தூய்மை, நட்பு, நடுவு நிலைமை, அழுக்காறாமை, புறம் கூறாமை, பயன் இல் சொல்லாமை போன்றவற்றைப் பின்பற்றுகின்றன.

புராண காலத்தை எடுத்துப் பார்த்தாலும் மக்கள் ஒழுக்கமின்றி வாழ்ந்ததை நாம் கண்டுகொள்ள முடியும். பெரும் பலம் உள்ளவனும், பக்திமானும், சிவனது திருக்கரத்தால் நீறனியப் பெற்றவனுமான இராவணன், இன்னொருவனின் மனைவியான சீதையைக் கவர்ந்தான். இது அவனுக்குத் தவறு என்று தெரியவில்லை.

முக்காலமும் உணர்ந்த கடவுளான இந்திரன் அகலிகையின் மேற் காமம் கொண்டு பல துன்பங்களை அனுபவித்தான்.

துரியோதனன், கடவுளான கிருஷ்ணன் தர்மத்தை எடுத்துரைத்தும் அதைக் கேட்கவில்லை. இப்படிப் புராணகால நாயகர்கள் பலர் சகல சாஸ்த்திரங்களையும் கற்றிருந்தும் அவற்றைப் பின்பற்றவில்லை. அக்காலத்தில் வாழ்ந்த மிருகங்கள் ஒழுங்காக வாழ்ந்திருக்கின்றன.

பகுத்தறிவு என்பது கல்வியால் உண்டாகும் என்று பெரியவர்கள் கூறுகிறார்கள். வேதகால உலகில் வாழ்ந்தவர்களும் சரி தற்போதைய உலகில் வாழ்பவர்களும் சரி கற்றபடி நடக்கவில்லை.

கல்வியென்றால் ஏராளமான நூல்களைக் கற்றுப் பரீட்சை எழுதித் தொழில் வாய்ப்புக்களைப் பெறுவது என்று மனிதர்கள் நினைக்கிறார்கள்.

ஏராளமான நூல்களைப்படித்து அதன் பொருளை உணர்ந்து தேர்ச்சி பெறுவதல்லக் கல்வி. தான் கற்ற படி நடத்தலே கல்வி. இதைத் திருவள்ளுவர் குறள் மூலம் சொல்கிறார்.

2. கற்றதனாலாய பயன்னென்கொல் வாலறிவன்
   நற்றாள் தொழாஅர் எனின்.

பேரறிவாளனான இறைவனைத் தொழாதவனின் கல்வியாலும், நல்ல மனிதர்களை மதிக்காதவனின் கல்வியாலும் ஆகும் பயன் என்ன?

391. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

கற்பதற்கேற்ப நூல்களைத் தெளிவாகக் கற்க வேண்டும். கற்ற பின் அதன்படி வாழ வேண்டும்.

395. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்

செல்வர்கள் முன் இரப்பதற்காகப் பணித்து நிற்கும் வறியவர்களைப் போல, கற்றவர் முன் ஏங்கிப் பணித்து நின்றாவது கல்வி கற்றோரே உயர்ந்தவர்கள். கல்லாதோர் இழிந்தவர்கள்.

396. தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு

மணலில் உள்ள கேணியைத் தோண்டத் தோண்ட நீரின் அளவு உயரும். அதே போல மக்கள் நூல்கள் பலவற்றையும் ஆழ்ந்து கற்கக் கற்க அறிவு கூடும்.

397. யாதானும் நாடாமல் ஊராமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத வாறு.

கற்றவர்களுக்கு எல்லா நாடுகளும் தம் நாட்டைப் போன்றவை. அப்படியிருக்க ஒருவன் சாகும் வரை கல்வி கற்காமல் காலம் கழிப்பது ஏன்?

398. ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து.

ஒரு பிறப்பிலே ஒருவன் கற்ற கல்வியானது அவனது ஏழு பிறப்புக்களிலும் தொடர்ந்து சென்று பெருமையைக் கொடுக்கும்.

399. தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

தாம் இன்புறுவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுகிறது என்று அறிந்து மகிழ்ந்த கற்றறிந்த அறிஞர்கள் மேன் மேலும் கற்க விரும்புவார்கள்.

400. கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;
மாடு அல்ல மற்றயவை.

ஒருவனுக்குத் துன்பத்தைக் கொடுக்காத அழிவில்லாத செல்வம் கல்வியே ஆகும்.; மற்றச் செல்வங்கள் எதுவும் அத்தகைய சிறப்புடயவை அல்ல

மாண்டூக்கிய உபநிடதம் ஒழுக்கத்தைப் போதிப்பவனை விட ஒழுக்கமாக வாழ்பவனே மேலானவன் என்று கூறுகிறது.

மனிதன் எதையும் அறிந்து கொள்வதற்குப் பிறரின் உதவியை நாடுகிறான். தான் கற்றவற்றைக் கூட நினைவில் வைத்துக் கொள்ளாது தேவையேற்படும் வேளைகளில் தான் கற்ற நூல்களைப் புரட்டிப் பார்க்கிறான். இல்லாவிட்டால் பெரியோரின் உதவியை நாடுகிறான்.

விலங்குகள் எதையும் நூல்கள் மூலம் கற்பதில்லை. தமது சமூகத்துடன் பழகுவதன் மூலமும், பயிற்சியின் மூலமும் கற்றுக் கொள்கிறன.

எந்த ஒரு மிருகமும் நோய் வந்த போது வைத்தியரிடஞ் சென்றதில்லை. அவை தமக்கிருக்கும் அறிவைக் கொண்டு தமக்கு வரும் நோய்களைக் குணப்படுத்துகின்றன.

இயற்கையை முழுமையாக மிருகங்கள் உணர்ந்துள்ளன. பருவ காலங்களைத் தெரிந்து வைத்திருக்கின்றன. பூமியில் நடைபெறும் அனர்த்தங்களை, அவ் அனர்த்தங்கள் நடைபெறுவதற்குப் பல நாட்களுக்கு முன்பே தெரிந்து கொண்டு தமது இருப்பிடங்களை விட்டு இடம்பெயர்ந்து சென்று விடுகின்றன. இதை உணரமுடியாத மனிதர்கள் தான் அனர்த்தங்களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகிறார்கள்.

சகுணம் பார்ப்பது, சாஸ்த்திரம் கேட்பதெல்லாம் மூட நம்பிக்கையென்று கற்றறிந்தவர்கள் கூறிய போதும், பலர் சகுணம் பார்க்கிறார்கள். பல்லி சொல்வதையும் காகம் கரைவதையும் நம்புகிறார்கள். காகம் பலவிதமாகக் கரையும். ஒவ்வொரு விதமாக அது கரையும் போது ஒவ்வொரு விதமான பலன் உண்டென்று மக்கள் நம்புகிறார்கள். பல்லி ஒவ்வொரு திக்கிலிருந்து சொல்லும் போது ஒவ்வொரு விதமான சம்பவம் நடைபெறும் என்று பஞ்சாங்கத்தில் கூறப்பட்டுள்ளது. இதை மக்களில் பெரும்பாண்மையானோர் நம்புகின்றனர்.

அன்புக்கு இலக்கணமாகத் திகழ்பவை மிருகங்கள்.

பண்புக்கும் நட்புக்கும் அணிகலமாக இருப்பவை மிருகங்கள்.

மனிதனின் தோழனாக இருப்பவை மிருகங்கள்.

மனிதனுக்குச் சேவகனாக இருப்பவை மிருகங்கள்.

மனிதனுக்குப் பணம் சம்பாதித்துக் கொடுப்பவை மிருகங்கள்.

மிருகப் பண்ணைகள் வைத்துப் பலர் கோடீஸ்வரர்களாக இருக்கின்றார்கள்.

மோப்ப சக்தியில், அறிவில் மனிதரை விட மிருகங்கள் மேம்பட்டவை.

வெடிபொருட்கள், போதைப் பொருட்களைக் கண்டுபிடிப்பவை மிருகங்கள்.

நாய், பசு போன்ற மிருகங்களுக்கு எசமானுக்குக் கஷ்டம், நோய், மரணம் என்பன வருவது தெரியும் என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

பல மிருகங்கள் எசமானார்க்கு வழிகாட்டிகளாகச் செயற்படுகின்றன.

ஐந்தறிவுள்ள மிருகங்கள் பண்புடனும் அர்ப்பணிப்புடனும் ஒழுக்கத்துடனும் செயலாற்றி வருகின்றன. ஆறறிவு படைத்த மனிதன் பண்புடனும் அர்ப்பணிப்புடனும் ஒழுக்கத்துடனும் செயலாற்றுகிறானா...? யோசித்துப் பாருங்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளாக மனிதன் வாழ்ந்து வருகிறான். விஞ்ஞானம் வளர்ந்த பின் நன்மைகளை விடத் தீமைகளே அதிகம். சூழல் மாசடைந்து மனிதனை அழிவின் எல்லைக்கு இட்டுச் செல்கிறது.

அன்பு, பண்பு, பாசம் யாவும் இன்று அற்றுப் போய் பணம் அந்த இடத்தைப் பெற்றுவிட்டது. பணம் தான் வாழ்க்கையா.....?

கடவுள் படைத்த உயிர்களுள் மனிதனைத் தவிர்ந்த மற்றெல்லா உயிர்களும் மகிழ்வுடன் வாழ்கின்றன.

மனிதனின் அடிப்படைத் தேவைகள் பூர்த்தியானாலும் மேலும் மேலும் அவன் ஆசைப்படுகிறான்.

கோடி கோடியாகப் பணம் வைத்திருப்பவனும் மேலும் பணம் தேவையென அவாப்படுகிறான். மனிதனின் ஆசைக்கு எல்லையே இல்லை.

ஆனால் மிருகங்கள் அப்படி எச்சந்தர்ப்பத்திலும் நடந்து கொள்வதில்லை. அளவுக்கதிகமாக அவை உண்பதும் இல்லை. ஆனால் அனைத்தையும் அவை அனுபவித்து மகிழ்கின்றன.

இப்படியிருக்க ஆறாவது அறிவால் மனிதன் எதைக் கண்டான்?. மனதில் நிம்மதியிருக்கா...? திருப்த்தி இருக்கா...? ஒற்றுமை இருக்கா...? ஒழுக்கமிருக்கா...? தன்னையும் கெடுத்துப் பிறரையும் கெடுத்து, உலகத்தையும் கெடுத்து எதுவுமே அனுபவிக்காது நிம்மதியின்றித் தவிர்ப்பது தான் ஆறாவது அறிவின் செயல்.